பக்கங்கள்: 12

விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 14 ஞாயிற்றுக்கிழமை 28.06.2020 கதிர் 235

### இது ரகசியம் அல்ல!

தேர்தல் காலத்தில் தேர்தல் சுவரொட்டி ஒட்டுவது குற்றம். அதிலும் அது எங்கு, யாரால் அச்சிடப்பட்டது என்ற விவரங்கள் இல்லாமல் சுவரொட்டிகளை வைத்திருப்பதும் குற்றம்.

அதுவும் ஒரு கட்சியின் பெயரில் தேர்தலில் போட்டி பக்கம் 02 »

# சர்வதேச ஆதரவுடனே புதிய அரசுடன் பேச்சு!

### திருமலை மக்கள் சந்திப்பில் சம்பந்தன் எடுத்துரைப்பு



திருமலை, ஜூன் 28

நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் அமையும் புதிய அரசுடன் சர்வதேச சமூகத்தின் ஆதரவுடனும் எல்லோருடைய ஆலோசனைகளையும் பெற்றே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சு நடத்தும்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட முதன்மை வேட்பாளருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

பக்கம் 02 »

## தமிழர் விடுதலைப் போராட்டத்தை கூட்டமைப்பே காட்டிக் கொடுத்தது!



### கருணா அம்மான் புதுக்கதை

அம்பாறை,ஜூன் 28

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழனுக்கு ஒரு பிரச்சினை வரும்போது அதைக் காப்பாற்ற முற்படாமல் காட்டிக்கொடுக்கும் கும்பலாகவே இருந்து வருகின்றனர். தமிழரின் விடுதலைப் போராட்டத்தையும் இந்தக் கூட்டமைப்பே காட்டிக் கொடுத்தது. பக்கம் 02 »

## பேராயரை நேரில் சந்தித்து மன்னிப்புக் கோரிய ஹரீன்



கொழும்பு, ஜூன் 28

முன்னாள் விளையாட்டுத் துறை அமைச்சர் ஹரீன் பெர்ணான்டோ ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுடன் பேராயர் பக்கம் 02 »

## தமிழர் உரிமையை நாங்கள் யாருக்குமே விற்கமாட்டோம்

### சுமந்திரன் தெரிவிப்பு





கிளிநொச்சி, ஜூன் 28

தமிழர்களின் உரிமைகளை நாங்கள் யாருக்குமே விற்றுவிடவில்லை.

– இப்படித் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் பக்கம் 02 »

## புதிய பிரதமரை பொதுபல சேனா தீர்மானிக்குமாம்

கொழும்பு, ஜூன் 28

புதிய அரசில் பிரதமர் பதவியைத் தீர்மானிக்கும் பலத்தைப் பெறும் வழியை முறையாக பொதுபலசேனா அமைப்புடன் இணைந்து வகுத்துள்ளோம்.

– இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற பக்கம் 02 »

## கோண்டாவிலில் ராணுவம் சுற்றிவளைத்துத் தேடுதல்

யாழ்ப்பாணம், ஜூன் 28

கோண்டாவில் பகுதியில் இராணுவத்தினர் பெரும் சுற்றிவளைப்பு தேடுதல் ஒன்றை நேற்றிரவு மேற்கொண்டனர்.

கோண்டாவில் வடக்கு அன்னுங்கைப் பகுதியில் குவிக்கப்பட்ட ஏராளமான பக்கம்02 »

## நாங்களாக அடிக்க மாட்டோம் அடித்தால் திருப்பி அடிப்போம்!

### முன்கூட்டியே எச்சரிக்கிறார் விக்னேஸ்வரன்





வழக்கம்பரை, ஜூன் 28

நாங்கள் எமது எதிரிகளை விமர்சனம் செய்வதிலும் பார்க்க எமது கொள்கைகளையும் நாம் செய்யவிருக்கும் நடவடிக்கைகளையும் பக்கம் 11 »

## வாக்குச்சீட்டு அச்சிடல் இன்றுடன் நிறைவுறும்!

கொழும்பு, ஜூன் 28

பொதுத் தேர்தலுக்கான வாக்குச்சீட்டுக்கள் அச்சிடும் பணிகள் இன்றுடன் முடிவடையும் என்று அரச அச்சக திணைக்களம் தகவல் பக்கம் 02 »

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யிட்டுக் கொண்டு தேர்தலில் போட்டியிடும் இன்னொரு கட்சியின் பெயரைத் தேர்தலில் பயன்படுத்துவது அதைவிடக் குற்றம். அது மாத்திரமல்லாமல் தேர்தலில் போட்டியிடும் பிறிதொரு கட்சியின் தலைவரின் படத்தை தன் சுவரொட்டியில் பயன்படுத்துவது இன்னொரு குற்றம்.

இவ்வளவு குற்றங்களையும் வரிசையாகக் வைத்துக்கொண்டு, அந்தச் சுவரொட்டியை நட்டநடு வீதியில் பாரதியார் சிலையின் பீடத்தின் மீது ஒன்றுக்கு இரண்டு தடவைகள் வீம்புக்கு ஒட்டுவது இவற்றை எல்லாம் விடப் பெரும் தார்மீகக் குற்றம்.

இவ்வளவும் நடந்தது யாழ்ப்பாணத்தில். ஜனநாயக இடதுசாரி முன்னணி என்ற வாசுவின் கட்சியில் மணிக்கூட்டுச் சின்னத்தில் போட்டியிடும் ஒரு வேட்பாளர் அவர். தேர்தலில் போட்டியிடும் மற்றொரு கட்சியான பொதுஜனப் பெரமுனவின் தொகுதி அமைப்பாளர் என்று வேறு தம்மை அவர் அந்தச் சுவரொட்டியில் அறிமுகப்படுத்தியிருக்கின்றார்.

பொதுஜன பெரமுனவின் தலைவர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பெரிய படம் வேறு அதில் இடம்பெற்று இருந்தது.

இவ்வளவு தேர்தல் குளறுபடி சுவரொட்டியை நேற்று முன்தினம் யாழ் நல்லூர் பாரதியார் சிலைப் பீடம் முழுவதும் ஒட்டியிருந்தார்கள். அந்தப் பண்பாடற்ற செயல் குறித்து நேற்று காலைக்கதிரில் சுட்டிக் காட்டியிருந்தோம்.

நேற்று முன்தினம் இரவே பண்பாடு தெரிந்த அப்பகுதி இளைஞர்கள் சிலர் அந்தச் சுவரொட்டிகளை அகற்றினர். ஆனால் அதை ஒட்டியோர் சண்டைக்கு வந்தனர். வீம்புக்கு நேற்று முன்தினம் இரவே பாரதியார் சிலைப் பீடத்தின் நான்கு புறமும் திரும்பவும் சுவரொட்டியை ஒட்டினர்.

இப்படி வீம்புக்கு சண்டித்தன அரசியல் நடத்திய அணியினர் நேற்றிரவு திடீரென தம்மைத் திருத்திக் கொண்டனர். அல்லது யாரேனும் அவர்களைத் திருத்தினரோ தெரியவில்லை. தாமாகவே வந்து நின்று அந்த சுவரொட்டிகளை பாரதியார் சிலைப் பீடத்திலிருந்து அகற்றினர். அப்படி நேற்றிரவு அந்த சுவரொட்டிகள் அகற்றப்பட்ட போது அந்த சுவரொட்டியில் இடம்பெற்றிருந்த வேட்பாளரும் அங்கு பிரசன்னமாகியிருந்தார்.

எது, எப்படியோ அந்த சண்டித்தன சுவரொட்டிக் குழு திடீரெனத் தன்னைத் திருத்திக் கொண்டதில் சந்தோம்.

★ ★ ★

இலங்கைத் தமிழரசைக் கட்டுக்கோப்பான கட்சியாகப் பேணுவதில் தவறிழைத்தார் என்பதும் மாவை சேனாதிராசா மீதான என் குறைகூறல்களில் ஒன்று.

முகப்புத்தகங்களைவைத்துக்கொண்டு கட்சியில் குழப்பம் ஏற்படுத்தும் 'காட்போட்' சண்டியர்களைக் கூப்பிட்டு ஒரு மிரட்டு மிரட்டி, விடயத்தை அவர் ஒழுங்குக்குக் கொண்டு வந்தமையை நானே இப்பத்தியில் சில தினங்களுக்கு முன்னர் மெச்சியிருந்தேன். நல்ல விடயத்தை உறுதியாகச் செய்யும்போது பாராட்ட வேண்டும் தானே...!

அதேபோன்று, சரியான ஒழுங்கு நடவடிக்கை எடுத்து, கட்சியைக் கட்டுக்கோப்புடன் தாம் நடத்துகின்றார் என்பதை நிரூபித்துக் காட்டுவதற்கு மாவையருக்கு மீண்டும் ஒரு நல்ல வாய்ப்புக் கிட்டியுள்ளது.

2013 மாகாண சபைத் தேர்தலின் போது சம்பந்தனும் சுமந்திரனும் கனடாவுக்கும் இங்கிலாந்துக்கும் நேரடியாக விஜயம் செய்து தேர்தல் நிதி திரட்டினர். கட்சியின் உத்தியோகபூர்வ நிதிக் கணக்குக்குள் அது வராவிட்டாலும், அந்தப் பணம் அப்போதே வேட்பாளர்களுக்கும், தேர்தல் செலவுக்கும் பங்கிட்டு வழங்கப்பட்டது. அதன் விவரம் எல்லாம் மாவையருக்கும் தெரியும். தமிழரசுக் கட்சியின் செயற்குழுக் கூட்டங்களிலும் பேசி முடிக்கப்பட்ட விவகாரம் அது.

இது தவிர, கட்சி சார்பில் வெளிநாட்டில் நிதி திரட்டப்பட்டதாகத் தகவல் ஏதுமில்லை.

ஆனால், தமிழரின் யாழ்.மாவட்ட மகளிர் அணிச் செயலாளர் நேற்று யாழ்ப்பாணத்தில் ஊடக மாநாடு கூட்டி, அப்படிக் கொஞ்சநஞ்சமல்ல, 21 கோடி 20 லட்சம் ரூபா பணம் கனடாவில் திரட்டினர் என்றும், அதை சுமந்திரன் பொறுப்பேற்றார் என்றும் பகிரங்கமாகக் குற்றம் சுமத்தியிருக்கின்றார். தேர்தலில் நிற்கும் கட்சி வேட்பாளர் – முக்கியஸ்தர் – பேச்சாளர் – ஒருவருக்கு எதிராக பகிரங்க ஊடக மாநாடு கூட்டி இப்படி ஒரு குற்றச்சாட்டை அறிவித்திருக்கின்றார்.

நேற்று இந்த அறிவிப்பை அவர் யாழ்ப்பாணத்தில் வெளியிட்ட போது மாவை சேனாதிராசா வட்டக்கட்சியில் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் இருந்தார். அப்போதே இது பற்றி அவரிடம் கூறப்பட்ட போது, கட்சி ரீதியாகக் கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனச் சீறினாராம் கட்சித் தலைவர் மாவையர்.

நல்லது. அந்தச் சீற்றம் உறுதியானதா அல்லது சோடாப் புட்டியின் 'காஸ்' போல வெறுமனே சீறி அடங்கிவிடுமா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

தேர்தல் வேட்பாளர் தெரிவு நடந்ததும் அதை ஆட்சேபித்து, தந்தை செல்வா சமாதிக்கு முன்னால் ஆராவாரம் பண்ணிய இரு மகளிரில் இவரும் ஒருவர். அப்போதே கட்சி ரீதியான நடவடிக்கை எடுத்திருக்கலாம். எடுக்கவில்லை.

அடுத்தடுத்த நாள் மார்ட்டின் வீதி அலுவலகத்துக்கு வந்த கட்சித் தலைவர் மாவை சேனாதிராசாவுக்கு இந்த அம்மணியே ஆராத்தி எடுத்தார்.

அந்த ஆராத்தியோடு, அப்போது அவர் கட்சிக் கட்டுப்பாட்டை மீறிப் பண்ணிய ஆராவாரத்துக்கு பாபவிமோசனம் வழங்கப்பட்டு விட்டது.

இப்போது கட்சிக்கும், வேட்பாளருக்கும் தேர்தல் சமயத்தில் அபகீர்த்தி ஏற்படுத்தும் விதத்தில் ஊடக மாநாட்டை கூட்டி ஆதார மற்ற குற்றச்சாட்டை பறை அறைந்திருக்கின்றார் அதே பெண்மணி.

இனி, என்ன? தமிழரசுக் கட்சியின் நாளிதழுக்கும் இது வெறும் வாய்க்கு அவல் கிடைத்த கதைதான். அதுவும் இந்த விவகாரத்தை ஒரு பிடிபிடித்துப் பிய்த்து உதற தமிழரசின் ஒழுங்குக்கட்டுப்பாடு கொடிகட்டிப் பறக்கும்.

இதைக் கட்டொழுங்கில் கொண்டுவருவதன் மூலம் தாம் ஒரு கட்சித் தலைவர் தான் என்பதை இப்போதாவது மாவையர் நிரூபிப்பாரா?

அல்லது சுமந்திரனுக்கு அபகீரத்தியை ஏற்படுத்தும் இந்த நடவடிக்கையை கட்டுப்படுத்தாமல் அங்கீரித்தால் விருப்பு வாக்கில் தாம் மேலேறி வரலாம் என்ற சராசரி அரசியல்வாதி போல சாதித்து, நடவடிக்கை ஏதும் எடுக்காமல் அவர் வாளாவிருப்பாரா?

பொறுத்திருந்து பார்ப்போமே...!

–மின்னல்–

## வாக்குச்சீட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்டுள்ளது.

பொதுத் தேர்தலுக்கான வாக்குச் சீட்டுகளை அச்சிடும் பணி முடிவுக் கட்டத்தை நெருங்கி விட்டதாகவும், கம்பஹா மாவட்டத்துக்கான வாக்குச்சீட்டுக்கள் மட்டுமே, இன்னும் அச்சிடவேண்டியிருக்கின்றன எனவும், அரச அச்சகத் திணைக்களத்தின் தலைவர் கங்கானி லியனகே தெரிவித்துள்ளார்.

கம்பஹா மாவட்டத்துக்கான வாக்குச் சீட்டுகளை அச்சிடும் பணி மேற்கொள்ளப்படுவதாகவும், இன்றுடன் அந்தப் பணியு முடிந்து விடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை, கண்டி மற்றும் திருகோணமலை மாவட்டங்களுக்கான வாக்குச்சீட்டுகள், தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் இன்று ஒப்படைக்கப்படும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## தமிழர் விடுதலைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு தமிழர் மகா சபை சார்பில் அம்பாறை மாவட்ட வேட்பாளராகப் போட்டியிடும் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் பிரதி அமைச்சருமான கருணா அம்மான் என்று அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

கல்முனையில் அமைந்துள்ள அவரது கட்சி அலுவலகத்தில் தாம் நேற்று நடத்திய விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

தற்போது அரசியலுக்காக திரிபடைந்துள்ள ஒரு பிரசாரமாகத்தான் எனக்கு எதிராக அண்மைக்காலமாக பலர் தெரிவிக்கின்ற கூவல்களைப் பார்க்கின்றேன். அரசியல் மேடைகளில் பிரசாரங்களுக்காக எதையும் பேசலாம் என்ற சுதந்திரம் தேர்தல்கள் ஆணையத்தால் வழங்கப்பட்டிருக்கின்றது. அதனை நாங்கள் ஒரு அரசியல் பேச்சாகத்தான் தெளிவாக்கினோம்.

பக்கம் 11 »

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காகக் கொழும்பிலிருந்து சில தினங்களுக்கு முன்னர் திருகோணமலை சென்றுள்ள சம்பந்தன், அங்கு நாள்தோறும் மக்கள் சந்திப்புகளை நடத்தி வருகின்றார். அந்தவகையில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

தமிழ் மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகள் காணப்பட வேண்டும். அதில் அரசியல் பிரச்சினைக்கு விரை வில் தீர்வு காணப்பட்டே தீர வேண்டும் என்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுதியாக நிற்கின்றது. அதற்காகப் பொதுத்தேர்தலின் பின்னர் அமையவுள்ள புதிய அரசுடன் பேச்சு நடத்த நாம் தயாராக இருக்கின்றோம்.

நாம் பலமான அணியுடன் நாடாளுமன்றம் சென்றால்தான் அரசுடன் காத்திரமான பேச்சுக்களை மேற்கொள்ள முடியும். எனவே, இம்முறை தேர்தலில் கூட்டமைப்பின் பிரதிநிதித்துவம் கடந்த முறையையும் விட அதிகரிக்கப்பட வேண்டும். அந்தப் புனிதமான கடமையை எமது மக்கள் தங்கள் வாக்குகள் மூலமாகத் தவறாது செய்ய வேண்டும். எமது மக்களின் ஒவ்வொரு வாக்கும் பெறுமதியானது.

புதிய அரசுடன் நாம் பேச்சு நடத்துவதற்கு முன்னர் அது தொடர்பில் சர்வதேச சமூகத்தின் ஆதரவைப் பெறுவோம். எல்லோருடைய ஆலோசனைகளையும் பெறுவோம். அதற்கமையவே பேச்சைத் தொடர்வோம். ஏனெனில் கடந்தகால வரலாறுகளை நாம் மறக்கமாட்டோம் – என்றார்.

## தமிழர் உரிமையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன்.

கிளிநொச்சி, வட்டக்கச்சி பொதுச் சந்தை வளாகத்தில் நேற்று நடைபெற்ற வேட்பாளர் அறிமுகக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்–

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வைக் கொண்டுவருவதற்கு கடுமையாக உழைத்திருக்கின்றோம். எமது உரிமைகள் வென்றெடுக்கப்படுவதோடு வடக்கு –கிழக்கு இணைந்த பொருளாதாரக் கட்டமைப்பும் உருவாக்கப்படவேண்டும்.– என்றார்

இந்தக் கூட்டத்தில் வேட்பாளர்களான சசிகலா ரவிராஜ், மாவை சேனாதிராசா, சிவஞானம் ஸ்ரீதரன், வே.தபேந்திரன் உள்ளிட்டோர் கலந்துகொண்டு உரையாற்றினர்.

## பேராயரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மெல்கம் ரஞ்சித் ஆண்டகையை நேற்று நேரில் சந்தித்து மன்னிப்புக் கோரினார்.

'கடந்த 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித்தேர்தலின்போது சஜித் பிரேமதாஸவுக்கான கத்தோலிக்க வாக்குகளைப் பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையே திசைதிருப்பினார். அவர் தற்போது அரசியல் நடத்துகின்றார்' என்று ஹரீன் பெர்னாண்டோ அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தார்.

அவரின் இந்த அறிவிப்பு அரசியல் களத்தில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. பல தரப்பினரும் கடும் கண்டனத்தை வெளியிட்டனர். சஜித் பிரேமதாஸ கூட பகிரங்கமாக மன்னிப்புக் கோரியிருந்தார்.

இந்தநிலையிலேயே சஜித் பிரேமதாஸவுடன் கொழும்பிலுள்ள பேராயரின் இல்லத்துக்கு நேற்றுச் சென்ற ஹரீன் பெர்னாண்டோ பேராயரை நேரில் சந்தித்துக் கலந்துரையாடி மன்னிப்புக் கோரினார்.

சந்திப்பின் பின்னர் அங்கிருந்த ஊடகவியலாளர்கள் முன்னிலையில் சஜித் பிரமதாஸ கருத்துரைக்கும்போது,

நானும் எமது கட்சி உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோவும் பேராயரை சந்தித்துக் கலந்துரையாடினோம். கடந்த காலங்களில் ஏற்பட்டிருந்த சில குழப்பங்கள் மற்றும் கருத்து முரண்பாடுகள் தொடர்பில் பேராயுடன் கலந்துரையாடி சிறந்ததொரு தீர்மானத்துக்குத் தற்போது வந்துள்ளோம்.

இந்தநிலையில் பேராயர் நாட்டுக்காகச் செய்துவரும் சேவைகளை நாங்கள் வரவேற்பதுடன், அவரது செயற்பாடுகளுக் கான எங்களது முழு ஒத்துழைப்பையும் பெற்றுக் கொடுக்கத் தயாராக இருக்கின்றோம்.

இதேவேளை கத்தோலிக்க மக்களை அடிப்படையாக அனைத்துச் செயற்பாடுகளுக்கும் முன்னுரிமை கொடுப்பதுடன், நாட்டிலுள்ள அனைத்து இன மக்களையும் இணைத்துக் கொண்டு எமது அடுத்தக் கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவே எதிர்பார்த்திருக்கின்றோம் – என்றார்.

## கோண்டாவிலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தினர் அந்தக் கிராமத்தில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அத்துடன் அந்தக் கிராமத்துக்கான அனைத்து வீதிகளிலும் பயணிப்பவர்கள் மறிக்கப்பட்டு சோதனையிட்டப்பட்டனர்.

## புதிய பிரதமரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் பொதுபலசேனா அமைப்புடன் இணைந்து 20 தேர்தல் மாவட்ட தொகுதிகளில் போட்டியிடவுள்ளோம். புதிய அரசில் பிரதமர் பதவியைத் தீர்மானிக்கும் பலம் எமது கட்சிக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது. தேசிய உற்பத்தி, பௌத்த மத கோட்பாடுகள் ஆகியவற்றுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

அமெரிக்காவுடனான எம். சி. சி ஒப்பந்தம் தொடர்பில் ஆராய்ந்த குழுவினர் ஒப்பந்தத்தின் மீளாய்வு அறிக்கையை ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் சமர்ப்பித்துள்ளனர்.

நாட்டுக்கு எதிரான ஒப்பந்தங்களில் கைச்சாத்திட மாட்டோம் என்று குறிப்பிட்டே ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியது.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல், எம்.சி.சி. ஒப்பந்தம் ஆகியவை பிரசார மேடைகளில் பிரதான பேசுபொருளாகக் காணப்பட்டது.

எம்.சி.சி. ஒப்பந்தத்தை ஆளும் தரப்பினர் பொதுத்தேர்தலின் தேர்தல் பிரசாரமாக்காமல் ஒப்பந்தம் தொடர்பில் அரசின் உண்மை நிலைப்பாட்டை மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் அனைத்தும் இன்று பொய்யாக்கப்பட்டுள்ளன. வாக்குறுதிகளினால் ஏமாற்றப்பட்டதைப் பெரும்பாலான மக்கள் தற்போது நன்கு உணர்ந்து கொண்டார்கள்.

தனிச் சிங்கள, பௌத்த மக்களின் ஆதரவில் ஆட்சிக்கு வந்த அரசு அந்த மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றியதா என்ற கேள்வி அனைத்துத் தரப்பிலும் உள்ளது.

நடைபெறவுள்ள பொதுத்தேர்தல் பல பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதாக அமைய வேண்டும். பிரதமர் பதவியை தீர்மானிக்கும் பலத்தைப் பெறும் வழியை முறையாக பொதுபலசேனா அமைப்புடன் இணைந்து வகுத்துள்ளோம் – என்றார்.

# கனடாவில் தமிழரசு சேர்த்த ரூ.21 கோடி என்னவாயிற்று?

## கட்சியின் யாழ் மாவட்ட மகளிர் அணிச் செயலாளர் கேள்வி

**நுண்நிதிக் கடனால் இடம்பெறும் தற்கொலைகள் மற்றும் வறுமைக்குள் வாடும் பெண் தலைமை குடும்பங்களின் மேம்பாட்டுக்காக கனடாவில் பல அமைப்புக்கள், நலன்விரும்பிகளால் சேகரித்து தமிழரசுக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஊடாக வழங்கிய 21 கோடியே 20 இலட்சம் ரூபாவுக்கு என்ன நடந்தது என தமிழரசுக் கட்சியின் யாழ் மாவட்ட மகளிர் அணிச் செயலாளர் திருமதி விமலேஸ்வரி ஶ்ரீகாந்தறூபன் கேள்வி எழுப்பியுள்ளார்.**




யாழ்.ஊடக அமையத்தில் இன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே திருமதி விமலேஸ்வரி மேற்படி கேள்வியினை எழுப்பியிருந்தார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவிக்கையில் –

ஈழத்தில் போரால் கடுமையாக பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அதற்கப்பால் வடக்கு கிழக்கில் நுண் நிதிக் கடன் பிரச்சினைகளால் பலர் குடும்பத்தோடு தற்கொலை செய்த சம்பவங்கள் இடம்பெற்றன. பலர் குடும்பங்களோடு தலைமறைவு வாழ்க்கை நடத்துமளவுக்கு தள்ளப்பட்டனர்.

மேலும் பல ஆயிரம் குடும்பங்கள் நுண்நிதிக்கடன்கால் நாளாந்த வருமானத்தை கடனுக்கு செலுத்திவிட்டு வறுமைக்குள் சிக்குண்டிருந்தனர்.

இவ்வாறான மக்களை கடன் சுமையிலிருந்து மீட்கவும் சுய வருமானத்தை கட்டியெழுப்பி அவர்களை வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பும் நோக்கோடு கனடாவிலுள்ள புலம் பெயர் ஈழத்தின் அமைப்புக்களும் புலம் பெயர் தமிழர்களும் இணைந்து தமிழரசுக் கட்சியூடாக 21 கோடியே 20 இலட்சம் ரூபாவினை வழங்கியிருந்தனர்.

குறித்த நிதி வழங்கப்பட்டமை தொடர்பில் அண்மையில் திருகோணமலையில் இடம்பெற்ற தமிழரசுக்கட்சியின் மகளிர் கூட்டத்தில் குகதாசன் என்பவரால் கணினி மூலம் வெளிப்படுத்தப்பட்டபோதும் குறித்த நிதி பயன்பாடு குறித்து இன்றுவரை எதுவும் வெளிப்படுத்தப்படவில்லை.

இந்நிலையில் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் பொருளாளர் கனகசபாபதியால் இது குறித்து கேள்வி எழுப்பப்பட்டதுடன் தமிழரசுக்கட்சியின் வங்கிக் கணக்கு கூற்றுக்களில் குறித்த நிதி வரவு வைக்கப்படவில்லை என்று தெரிவித்திருந்தார்.

நானும் இது குறித்து கேள்வியியை தொடர்ந்து எழுப்பியதன் பின்னர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தானே குறித்த நிதியினை கனடாவிலிருந்து பெற்று வந்ததாக குறிப்பிட்டார்.

ஆனால் குறித்த 212 மில்லியன் ரூபாவுக்கு என்ன நடந்தது என்பது குறித்து இன்றுவரை எந்த உத்தியோக பூர்வத் தகவல்களும் வெளிப்படத்தப்படவில்லை.

நுண்நிதிகளால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கோ பெண்தலைமைத்துவக் குடும்பங்களுக்கோ குறித்த நிதியிலிருந்து இதுவரை எந்த உதவிகளும் செய்யப்பட்டதாக தெரியவில்லை.

அவ்வாறாயின் குறித்த நிதி எங்கே? அந் நிதியை யார் கையாண்டார்கள்? குறித்த நிதி மோசடி செய்யப்பட்டுவிட்டதா? போன்ற சந்தேகங்கள் காணப்படுகின்றன.

இது குறித்து தமிழரசுக்கட்சி ஊடாக நிதிக்கு என்ன நடந்தது என்பது குறித்து விசாரணை செய்வதற்கு அழுத்தம் கொடுப்போம். நிச்சயமாக இது வெளிப்படுத்தப்படும். – எனத் தெரிவித்துள்ளார்.

## விபத்தில் பலி

**(அப்துல்சலாம் யாசீம்)**

திருகோணமலை – மட்டக்களப்பு பிரதான வீதி சேருவில பகுதியில் நேற்றுவ்மோட்டார் சைக்கிளுடன் லொறி மோதியதில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்தில் சேருவில – நவ நகர பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஏ.ஜீ. குணரத்ன (50வயது) என்பவர் உயிரிழந்தார்.

உயிரிழந்த வயோதிபரின் சடலம் தற்போது திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் லொறியின் சாரதியை நேற்று மாலை மூதூர் நீதிவான் முன்னிலை யில் ஆஜர்படுத்திய போது எதிர்வரும் 7ஆம் திகதி வரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

## முகக்கவசம் அணியாதோருக்கு வவுனியாப் பொலிஸார் தண்டம்











வவுனியாவில் முகக்கவசம் இன்றி பயணிப்பவர்களுக்கு தண்டப்பணம் விதிக்கும் நடவடிக்கையில் வவுனியா பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

எம்மை பாதுகாக்க தலைக்கவசம் அணிவது எவ்வாறு கட்டாயம் ஆக்கப்பட்டதோ அதே போன்று எம்மையும் மற்றவர்களையும் கோவிட் -19 வைரஸ் தாக்கத்திலிருந்து பாதுகாப்பதற்கு முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் முகக்கவசம் அணியாது வீதிகளில் செல்பவர்களுக்கு தண்டப்பணம் விதிக்கப்படு கின்றது எனத் தெரிவிக்கப்பட்டது.

குறிப்பாக இன்றையதினம் முகக்கவசம் அணியாது மோட்டார் சைக்கிள் சென்றவர்களுக்குதலைக்கவசம்அணியவில்லை என்ற குற்றச்சாட்டில் தண்டப்பத்திர மும், முகக்கவசம் அணியாது வாகனங்களில் செல்பவர்களுக்கு ஆசனப்பட்டி அணியவில்லை என்ற குற்றசாட்டிலும் தண்டப்பத்திரம் வழங்கப்படுகின்றது.

நாளை முதல் முகக் கவசங்களை அணியாதவர்கள் 14 நாள்களுக்கு சுய தனிமையில் ஈடுபடுத்தப்படுவார்கள் என சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தமை யும் குறிப்பிடத்தக்கது.

(உ - 100)

காப்புக் கருவிகள் மற்றும் சாதனங்கள்
சிறுவர்களுக்கான முகக்கவசங்கள்




சகல வயதினருக்குமான முகக்கவசங்கள் விற்பனைக்குண்டு
கூடிய தொகைக் கொள்வனவுக்கு விஷேட விலைக்கழிவு
வடமாகாணத்தில் எப்பிரதேசங்களுக்கும் விநியோகிக்கப்படும்
(Be Safe, Stay Safe, saynoto COVID 19) Condition Apply
NORTH LEAD DISTRIBUTORS
253, Stanly Road, Jaffna
அழையுங்கள்
0774192275, 0779184018
0772533390,021-2216980

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இராணுவ ஆட்சி எனும் பேரச்சம்

"எந்தக் காலத்திலும் கண்டிராத ஓர் இராணுவ ஆட்சி நாட்டில் ஏற்படப் போகின்றது. இது குறித்து நாம்அனைவரும் விழிப்புடன் இருக்க வேண்டும்." என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் எச்சரித்திருக்கின்றார்.

இந்த எச்சரிக்கை வடக்கு, கிழக்கில் இருந்து மட்டுமல்ல, தென்னிலங்கையின் பிரதான கட்சிகளிடமிருந்தும் வந்த வண்ணம் உள்ளன.

அவை மட்டுமல்ல, இலங்கை விவகாரத்தில் ஈடுபாடு காட்டும் சர்வதேச தரப்புகள், இராஜதந்திர மட்டங்கள், நோக்கர் குழுக்கள் எல்லாமுமே அத்தகைய ஓர் அச்ச நிலைப்பாட்டுடன் தான் இலங்கைத் தீவை அவதானித்துக் கொண்டிருக்கின்றன.

இது ஒரு புதிய விடயமல்ல. கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்றமையை அடுத்து கடந்த ஏழு மாதங்களாகக் கட்டவிழும் சம்பவங்கள் அத்தகைய அச்ச சூழலைத்தான் மெல்ல மெல்ல உருவாக்கிக் கொண்டிருக்கின்றன.

கோட்டாபய ராஜபக்ஷவை அதிகாரத்துக்குக் கொண்டு வருவதற்கான திட்டத்தை நீண்ட காலமாக செயற்படுத்துவதில் முக்கிய பங்கு வகித்த அமைப்புகளில் ஒன்று 'வியத்மக'. புத்திஜீவிகள், துறைசார் நிபுணர்களைக் கொண்ட குழுமம் இது.

தேர்தல் வெற்றிக்குப் பின் அதிகாரத்துக்கு வந்ததன் பின்னர் முன்னாள் படையினருக்கும் முப்படையினருக்கும் ஆட்சியில் கொடுக்கப்படும் அதீத முக்கியத்துவம் கண்டு வெறுத்துப் போன வியத்மக உறுப்பினர்கள் பலர் மெல்ல கோட்டா அணி பக்கத்திலிருந்து ஒதுங்கத் தலைப்பட்டு விட்டனர் என்று தகவல்.

ராஜபக்ஷக்களின் ஆட்சியில் இந்தத் தேசம் பத்தாண்டுகள் இருண்ட யுகத்தை நேரடியாக அனுபவித்த துன்பியல் அனுபவத்தைக் கொண்டது.

யுத்தத்தை நடத்தி, 'பயங்கரவாதிகளை' தோற்கடிப்பது என்ற பெயரில், முன்னாள் மனித உரிமைகள்வாதியான மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் இந்தத் தீவில் அரங்கேறிய அராஜகங்கள் சொல்லி மாளாதவை. வெள்ளை வான் கலாச்சாரத்தில் இருந்து காணாமல்போதல் வரை கட்டுமட்டில்லா கொடூரங்களை இந்த நாடு தரிசிக்க வேண்டியிருந்தது.

போதிமாதவன் போதித்த பஞ்சசீலம் நிலவ வேண்டிய தேசத்தில் பஞ்சமாபாதங்களும் தலைவிரித்தாடின. கொத்துக் கொத்தாக மக்கள் கொன்றொழிக்கப்பட்டார்கள். மனித உரிமை மீறல்கள், மனித மாண்புகளுக்கு மாறான அராஜகங்கள், யுத்தக் கொடூரங்கள், யுத்தக் குற்றங்கள், இனவழிப்பு அட்டூழியங்கள் தாராளமாக அரங்கேறின.

இந்தத் துன்பியல் நிகழ்வுகளுக்கான அநீதிகளுக்கான பொறுப்புக் கூறல் இன்னும் இடம்பெறவில்லை.

படுகொலைக் கொடூரங்களைத் தாராளமாக இழைத்த குற்றவாளிகள் சட்ட விலக்களிப்புடன் சுயாதீனமாக, சுதந்திரமாக சமூகத்தில் நடமாடுகின்றனர்.

தண்டிக்கப்படுவோம், சட்டத்தின் முன் விசாரிக்கப்படுவோம் என்ற மனக்கிலேசம் ஏதும் அவர்களுக்கு இப்போது இல்லை.

அந்தக் கொடூங்களைப் புரிவதற்கு அச்சமயத்தில் எது அல்லது யார் காவலரனாகத் தமக்கு இருந்தனரோ அவர்கள் இன்றும் அப்படி இருப்பார்கள் என்ற நிலைமை உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

அதனால் நாட்டில் மீண்டும் இருண்ட யுகம் - குற்றக் காரிருள் மேகம் - சூழ்ந்து கவ்வும் என்ற பேரச்ச நிலைமை எல்லோர் மத்தியிலும் ஏற்பட்டிருக்கின்றது.

தமது அரசியல் எதிரிகளான தமிழ்க் கூட்டமைப்பினர் 'எப்போதுமே கண்டிராத இராணுவ ஆட்சி வருகிறது' என்று எச்சரித்திருக்கின்றமையால் இது தேர்தல் பிரசார வெற்றுவேட்டு என எச்சரிக்கின்றார் ஈழ மக்கள் ஜனநாயக் கட்சியைச் சேர்ந்த முனனாள் வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவரான சி.தவராசா.

இப்போது ஏற்பட்டுள்ள பேரச்ச நிலையை தமக்குச் சாதகமான பிரசாரத்துக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் - குறிப்பாக சுமந்திரன் போன்றோர் - பயன்படுத்துகின்றனர் என்பது வேறு விடயம்.

ஆனால், இராணுவ ஆட்சி முறை நிர்வாகத்தில் ஈடுபாடும் விருப்பும், இன்னும் விரிவாகச் சொல்லப் போனால் வெறிப் போக்கு வாஞ்சையும் கொண்ட ஒருவரின் கைகளில்தான் நாடு இன்று சிக்குண்டிருக்கின்றது.

அன்று அவர் பாதுகாப்புச் செயலாளர். அவரைக் கட்டுப்படுத்தக் கூடிய ஜனாதிபதி பதவியில் ஜனநாயப் போக்குத் தடத்திலே நீண்டகாலம் மக்களுடன் பயணித்த ஒருவர் இருந்தார்.

இன்று அவர் ஜனாதிபதி. முன்னாள் ஜனாதிபதி அவரைக் கட்டுப்படுத்தும் நிலையில் இல்லை. கட்டுப்படும் நிலையில்.

இந்தப் பின்புலத்தில் சுமந்திரன் விடுத்த எச்சரிக்கை சாத்தியமாகும் என்ற அச்சம் நியாயமானதாகவே தோன்றுகின்றது.

# யாழ். முதல் ஆயரின் சிலை திறப்பு









(எஸ்.நிதர்ஷன்)

யாழ். மறைமாவட்டத்தின் முதலாவது ஆயர் Bettacchini சிலை யாழ் ஆயர் இல்லத்தில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

யாழ். மறைமாவட்டத்தின் முதல் ஆயரின் வடிவமைக்கப்பட்ட உருவச் சிலையை யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் வண.யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது.

சிலையை வடிவமைத்த சிற்பக் கலைஞர்கள் இருவர் யாழ். மறை மாவட்ட ஆயரினால் கௌரவிக்கப்பட்டனர்.

சிலை திறப்பு நிகழ்வில் யாழ் மறைமாவட்ட குருக்கள் கலந்து கொண்டனர்.

# கிழக்கு எம்.பிக்களின் குடும்பத்தவரைக் கருணா கடத்தி அவசரகாலச் சட்டத்தை ஆதரிக்க நிபந்தனை விதித்தார்

## வவுனியாக் கூட்டத்தில் செல்வம் அடைக்கலநாதன் குற்றச்சாட்டு

(கி.வசந்தரூபன்)

கிழக்கிலே கருணா அம்மான் ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய மனைவி, பிள்ளைகள் சொந்தங்களை கடத்தி வைத்துக் கொண்டு நாடாளுமன்றத்தில் அவசரகாலச்சட்டம் மற்றும் பயங்கரவாத சட்டங்களுக்கு ஆதரவளிக்க வேண்டும் என நிபந்தனை விதித்தார் என வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியா, சகாயாமாதாபுரம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற தேர்தல் பிரச்சார கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ தேசியக் கூட்டமைப்பு பல தியாகங்களை செய்துள்ளது. அவசரகாலச் சட்டம் மற்றும் பயங்கரவாத சட்டம் என்பவற்றுக்கு எதிர்த்து நாங்கள் வாக்களிக்கும் போது கிழக்கிலே கருணா அம்மான் ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய மனைவி, பிள்ளைகள் சொந்தங்களை கடத்தி வைத்து இந்த அவசரகாலச்சட்டம் மற்றும் பயங்கரவாத சட்டங்களுக்கு ஆதரவளிக்க வேண்டும் என நிபந்தனை விதித்தார். மனைவி, பிள்ளைகளை கடத்தி வைத்தால் என்ன செய்வது? மனித மனம் அப்படி தானே. ஆனால் அதற்கு கூட நாங்கள் விட்டுக் கொடுக்காது எதிர்த்து வாக்களித்தோம். இப்படித் தான் நாம் எமது மக்களுக்காக கஷ்டப்பட்டோம். ஆனால் கூட்டமைப்பு என்ன செய்தது என இப்போது கேட்கிறார்கள்.

எமது மக்களுக்கெதிரான படுகொலைகள், எமது மக்களுக்கு எதிரான செயற்பாடுகளுக்கு எதிராக உலக ரீதியில் எமது குரல்கள் ஒழித்தன. நாடாளுமன்றத்தில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினோம். அப்பொழுது முப்படைகளையும் கொண்ட பலம் இருந்தது. கடந்த 5 வருடங்களில் ஒரு சந்தர்ப்பம் எங்களுக்கு கிடைத்தது. அதுவரை காலமும் சிங்கள தேசத்திற்கு எதிராக இருந்தோம். 'நாங்கள் கொடுக்க தயார், அவர்கள்தான் எதிர்கிறார்கள்' என்று சொன்னார்கள். அதனால் ஒரு சந்தர்ப்பம் கொடுத்தோம்.

மைத்திரியும், ரணிலும் இணைந்து ஆட்சி அமைத்தார்கள். ஜனாதிபதியை உருவாக்க கூடிய வல்லமை சிறுபான்மை மக்களிடம் இருந்தது. அந்த அடிப்படையில்தான் மைத்திரிபால சிறிசேன தெரிவு செய்யப்பட்டார். இரண்டு கட்சிகளும் இணைந்து ஆட்சி அமைத்த போது அவர்களிடம் உங்களது தீர்வு தொடர்பில் பேசுங்கள் என உலக நாடுகள் கூறின. நாங்கள் உங்களுடைய பக்கம் இருக்கின்றோம் என்றார்கள்.

ஆகவே ஒரு சந்தர்ப்பத்தை நாங்கள் உருவாக்க வேண்டும் என்பதற்காக அந்த அரசாங்கத்திற்கு நாங்கள் வெளியில் இருந்து ஆதரவு கொடுத்தோம். அதன் மூலம் நிபுணர் குழு அமைத்து அரசமைப்புக்கான இடைக்கால வரைவைக் கொண்டு வருகின்ற போது ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையில் பிரிவு ஏற்பட்டு இடை நடுவில் உள்ளது.

நாங்கள் இணைந்து செயற்பட்ட போது முழுமையாக விடுபடா விட்டாலும் அதிக காணிகள் விடுவிக்கப்பட்டன. எமது மக்கள் போராட்டங்களை நடத்தக் கூடியதாக இருந்தது. முள்ளியவாய்காலில் மரணித்தவர்களை நினைவு கூரும் போது எந்த தடையும் வரவில்லை. இதன்போது கம்பெரலிய போன்றன வருகின்ற போது அதனை பிரித்து செய்தோம்.

ஆகவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உங்களை அடைமானம் வைத்து சோரம் போகவில்லை. சிலர் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பெயரைக் கெடுக்கும் வகையில் இருக்கிறார்கள் என்பது உண்மை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இருந்து கொண்டு போராட்டத்தை தாம் ஆதரிக்கவில்லை என்று சொன்னவர்கள் இருக்கிறார்கள்.

அப்படியானவர்களின் பெயரைச் சொல்லிவர்களைப் பெரியாள் ஆக்க விரும்பவில்லை. விடுதலை புலிகளின் அரசியல் வேலைத்திட்டத்தை ஆதரிக்கவில்லை என்று சொல்லிக் கொண்டு இன்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள் இருப்பவர்களை மக்கள் புறம் தள்ள வேண்டும். காட்டிக் கொடுப்பாவர்கள், துரோகிகள் களையப்பட வேண்டும்.

இம்முறை தேர்தலில் பல கட்சிகளும், சுயேச்சை குழுக்களும் போட்டியிடுகின்றன. விமல் வீரவன்ஸ தமிழர்களின் வாக்குத் தேவையில்லை என்கிறார். ஆனால் இங்கு மொட்டு போட்டியிடுகின்றது. வடக்கும், கிழக்கும் தமிழர்களின் இடம் எனச் சொல்ல முடியாது என்கிறார் மஹிந்த. சிந்தனைகளைப் பாருங்கள். கருணா காட்டிக் கொடுத்த துரோகி. போராட்டத்தைக் காட்டிக் கொடுத்து மழுங்கடித்த கருணா அந்த செயலுக்கு இன்று தண்டனையை அனுபவிக்கிறார். அவரை அன்று வைத்திருந்தவர்களே இன்று விமர்சிக்கின்றார்கள். – எனவும் தெரிவித்தார். (உ–100)

## * தமிழ் ஈழத்தை விரும்பும் தமிழ் அடிப்படைவாதியும் அல்லன்
## * சமத்துவத்தை ஏற்காத சிங்கள அடிப்படைவாதியும் அல்லன்

# நான் சிங்கள, தமிழ், முஸ்லிம் இனங்கள் ஒரே நாட்டுக்குள்ளே சமத்துவமாக வாழ்வதை விரும்பும் ஓர் இலங்கைத் தேசியவாதி

### மனம் திறக்கின்றார் மனோ கணேசன்; கருணாவின் கருத்துக்குப் பதிலடி

**“கருணா அம்மான் என்னைப்பற்றி விளக்கமில்லாமல் பேசுகின்றார். - என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான மனோ கணேசன் தெரிவித்தார்.**



இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

நான் ஒருபோதும் புலிகளின் மேடையில் ஏறி, தனிநாட்டு கோரிக்கையை வலியுறுத்தியோ, ஆயுத போராட்டத்தை ஆதரித்தோ பேசியவனல்லன். உண்மையில் போர்நிறுத்த காலத்தில் சட்ட பூர்வமாக தென்னிலங்கையில் இருந்து பலர் கிளிநொச்சி சென்று நிகழ்வுகளில் கலந்துக்கொண்டார்கள். அப்படி ஒருமுறை பொங்கு தமிழ் விழாவில் நான் உரை நிகழ்த்தும் போது -

இலங்கையில் தமிழ் தேசியமும், சிங்கள தேசியமும் ஒன்றாய் வாழ இன்னமும் அவகாசம் இருக்கிறது. இரண்டு இனங்களுக்கும் இடையில் சமத்துவம் இருக்க வேண்டும். சமத்துவம் இல்லாவிட்டாலேயே பிரிந்து செல்லும் தேவை ஏற்படுகிறது என்றுதான் நான் பேசினேன்.

ஆனால், நான் ’பொங்கு தமிழ்’ விழாவிற்கு சென்று அந்த அமைப்பிற்கு ஒத்துழைப்பு வழங்குவதாக கூறி தனிநாட்டு கோரிக்கையை வலியுறுத்தி பேசினேன் எனப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் பிரமுகர், இந்நாள் அரசு சார்பு வேட்பாளர் கருணா அம்மான் கூறியுள்ளார். இது இதற்கு முன்னர் பல சிங்கள அடிப்படைவாதிகள் என் மீது சுமத்திய குற்றச்சாட்டுதான். இப்போது புதிதாக நண்பர் கருணாவும் சொல்கிறார். அவ்வளவுதான்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைவர் சம்பந்தன், முன்னாள் எம்.பி. அடைக்கலநாதன் ஆகியோர் தொடர்பிலும், கருணா அம்மான் இப்படியே குற்றம் சாட்டுகிறார். அவர்களைப் பற்றி நான் பேசப் போவதில்லை. அதை அவர்கள் பார்த்துக்கொள்வார்கள் என எண்ணுகிறேன்.

என்னைப் பற்றிப் பொய் சொல்லத் தேவை கருணாவுக்கு இருப்பதாக நான் நினைக்கவில்லை. ஆகவே, நண்பர் கருணா அம்மான் என்னைப்பற்றி விளக்கமில்லாமல் பேசுகிறார் என நினைக்கிறேன்

இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக ஆயுதத்தை கையில் ஏந்தி, எழுந்து வாருங்கள். என்று நான் கூறினேன் என அரசாங்கத்தின் சுயாதீன தொலைக்காட்சி அலைவரிசையில், அன்றைய மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் செய்தி ஒளிபரப்பப்பட்டது. அதை செய்தவர் யுத்தம் நடந்தபொழுது யுத்த அறிக்கைகளை சிங்கள மக்களுக்குச் சுடச்சுட வழங்கி பிரபல்யமான சமன் குமார ராமவிக்ரம என்ற ஊடகவியலாளர் ஆவார்.

உண்மையில் நடந்தது என்ன? போர் நிறுத்த காலத்தில் அந்த விழாவிற்கு தென்னிலங்கையில் இருந்து பல அரசியல்வாதிகள் சென்று வந்தனர். ராஜபக்ஷ அரசாங்கத்தில் அப்போதும், அதற்கு பின்னரும் இருந்த பல தமிழ், சிங்கள, முஸ்லிம் அரசியல்வாதிகள் புலிகளின் அரசியல்துறையுடன் தொடர்பு கொண்டவர்கள்தான். புலிகளுக்குத் தடை விதிக்கப்பட முன் அது அன்று சட்ட விரோத செயற்பாடாகக் கருதப்படவில்லை.

கிளிநொச்சியில் நடைபெற்ற அந்த ஒரு ’பொங்கு தமிழ் விழா’வில் நானும் கலந்துகொண்டேன். பொங்கு தமிழ் விழா என்பது அரசியல் துறை நிகழ்வு என்பது கருணா அம்மானுக்கு தெரிந்து இருக்க வேண்டும். கிளிநொச்சி விழாவில் நான் ஆற்றிய உரையை சமன் குமார திரித்து சிங்களத்தில் தப்புத் தப்பாகச் சொன்னதால் தான் அந்த உரை சர்ச்சைக்குள்ளாகியது.

ஆயுதம் தூக்குங்கள்! இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக ஆயுதம் தூக்குங்கள்! என்று நான் புலிகளின் மேடையில் ஏறி இரண்டு கைகளையும் உயர்த்தி ஆட்டி நான், பேசினேன் என சமன் குமார எனது தமிழ்ப் பேச்சை திரையில் காட்டி, பின்னணியில் சிங்களத்தில் கூறும் பொழுது சிங்கள மக்கள் மத்தியிலே சர்ச்சை ஏற்படுவது சகஜம்தான். ஆனால் இந்த தப்பைக்கூட தப்பில்லாமல் செய்வதற்கு இந்த சமன் குமாரவிற்கு அறிவு இருக்கவில்லை.

உண்மையில் புலிகளின் மேடையில் ஏறி நான் என்ன பேசினேன்? இந்நாட்டிலே சிங்கள தேசியமும், தமிழ் தேசியமும் இணைந்து ஒரே வட்டத்திற்குள்ளே வாழ்வதற்கு இன்னமும் இடம் இருக்கின்றது. ஆனால் ஒரே நிபந்தனையாக இரண்டுக்கும் இடையில் சமத்துவம் நிலவ வேண்டும் இதுவே எனது பேச்சின் சாராம்சமாக இருந்தது.

உண்மையில் அச்சந்தர்ப்பத்தில் விடுதலை புலிகள், அரசியல், இராணுவ பலத்தில் அதி உச்சத்தில் இருந்தார்கள். அன்று அவர்களது மேடையில் ஏறி தமிழ் ஈழத்தை பற்றி பேசாமல் ஐக்கிய இலங்கையை பற்றி நான் பேசி இருக்கின்றேன். அதுவும் தமிழில் பேசியிருக்கிறேன்.

இதைப் புரிந்துகொள்ளக்கூடிய சிங்கள அரசியல்வாதிகள் இருப்பார்களேயானால், உண்மையிலேயே அவர்கள் எனக்கு தேச அபிமானி பட்டம் வழங்கி, இராமநாதனை வண்டியில் ஏற்றி இழுத்து சென்றதை போல, என்னையும் கௌரவபடுத்தியிருக்க வேண்டும். இருப்பினும் இங்குள்ள இனவாத முட்டாள்கள் எனது பேச்சை திரிபுபடுத்தி எனக்கு இனவாத சேறு பூசினார்கள். இப்போது அதையே தமிழ் மொழியில் நான் பேசுவதை புரிந்துக்கொள்ள கூடிய கருணா அம்மானும் செய்கிறார்.

சம்பந்தனும், அடைக்கலநாதனும், நானும் இடம் பெறும் அந்த காணொளி, கருணா சொல்வதைபோல், பரம இரகசியம் கிடையாது. யூடியூப் (You Tube) அலைவரிசைக்கு போய் அந்த காணொளியை யாரும் பார்க்கலாம். அதை பார்த்தால், உண்மையில் நான் என்ன பேசியுள்ளேன் என்பதை தெரிந்து கொள்ளலாம். கருணா அம்மான் அதை பார்த்து, நான் அங்கே என்ன பேசுகிறேன் என்பதை கேட்டு தெரிந்துகொள்ள வேண்டும் என நான் விரும்புகிறேன்.

நான் தமிழ் ஈழத்தை விரும்பும் தமிழ் அடிப்படைவாதியும் அல்லன். இனங்களுக்கிடையில் அரசியல் சமத்துவத்தை ஏற்காத சிங்கள அடிப்படைவாதியும் அல்லன். நான், அரசியல் நிலைப்பாடுகளை காலத்துக்கு காலம், திடீர் திடீரென மாற்றிக்கொள்ளும் அரசியல் சந்தர்ப்பவாதியும் அல்லன். உண்மையில், நான் சிங்கள, தமிழ், முஸ்லிம் இனங்கள் ஒரே நாட்டுக்குள்ளே சமத்துவமாக வாழவேண்டும் எனக் கனவு காணும் ஒரு இலங்கைத் தேசியவாதி.

இலங்கை அரசியல் பரப்பில், இன்று என்னை எவராவது புரிந்துக்கொள்ள மறுப்பார்கள் எனில், அது என்னை விட என்னை புரிந்துக்கொள்ள மறுப்பவர்களுக்குதான் நஷ்டம். காலம் இதை நிரூபிக்கும்.

# மாணவர் எண்ணிக்கை குறைந்த பாடசாலைகள் வடக்கிலே அதிகம்

(ந.லோகதயாளன்)

இலங்கையில்200மாணவர்களை விடக் குறைந்த எண்ணிக்கையான மாணவர்களைக் கொண்டுள்ள பாடசாலைகள் 373. அவற்றில் அரைவாசிக்கும் அதிகமான பாடசாலைகள் வடக்கு, கிழக்கு மாகாணத்திலேயே உள்ளன. அவற்றில்150பாடசாலைகள் மூடப்பட்ட நிலையில் இருக்கின்றன எனவும் கல்வி அமைச்சு சுட்டிக்காட்டுகின்றது.

இலங்கையில் மிகவும் குறைந்த எண்ணிக்கை மாணவர்களுடன் இயங்கும் அதிக பாடசாலைகள் வடக்கு மாகாணத்திலும், இரண்டாவதாக கிழக்கு மாகாணத்திலுமே இருக்கின்றன எனக் கல்வி அமைச்சு கண்டுள்ளது. அதிலும் குறிப்பாக ஒரேயொரு மாணவனுடனும் ஒரு பாடசாலை இயங்குவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அதேபோன்று ஒன்று தொடக்கம் 10 வரையான எண்ணிக்கை மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள் மன்னார் மற்றும் மட்டக்களப்பில் தலா இரண்டும், வவுனியா , முல்லைத்தீவு மாவட்டங்களில் தலா ஒன்றும் காணப்படுகின்றன. 11 தொடக்கம் 50 வரையான மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகள் மாவட்ட ரீதியாக மன்னாரில் 13,மட்டக்களப்பு, அம்பாறையில் தலா 10, திருகோணமலையில் 12, முல்லைத்தீவில் 4, வவுனியாவில் 3, யாழ்ப்பாணத்தில் இரண்டும் உள்ளன.

11 தொடக்கம் 50 வரையான மாணவர்கள் எண்ணிக்கை கொண்ட பாடசாலைகளின் நிலைமை இது என்றால் 51தொடக்கம்100 வரையான மாணவர்கள் நிலைமையும் மோசமாகவே உள்ளது.

இந்த வகையில் அம்பாறையில் 19 பாடசாலைகளும் , திருகோணமலையில் 10 பாடசாலைகளும், மன்னாரில் 9 பாடசாலைகளும், மட்டக்களப்பில் 6 பாடசாலைகளும், யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் முல்லைத்தீவில் தலா 4 பாடசாலைகளும், கிளிநொச்சியில் 3 பாடசாலைகளும் உள்ளன என கல்வி அமைச்சின் தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

இவ்வாறு பின்னடைவு நிலையில் காணப்படும் பாடசாலைகளில் பலவற்றிற்கு இன்றுவரை போக்குவரத்து வசதிகளே கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது. வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் இயங்கும் 65 பாடசாலைகளில் 41 பாடசாலைகளுக்கு பஸ் போக்குவரத்து வாய்ப்பே இல்லை என நீண்டகாலமாக சுட்டிக்காட்டப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# ஆட்டநிர்ணய சதி: வீரர்களையும் விசாரிக்க முடிவு

2011ஆம் ஆண்டில் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஆட்டநிர்ணய விவகாரம் குறித்து அப்போட்டியில் கலந்து கொண்ட இலங்கை அணி வீரர்களை விசாரணை செய்ய விளையாட்டுத்துறை அமைச்சு தீர்மானித்துள்ளது.

2019ஆம் ஆண்டு 24ஆம் இலக்க விளையாட்டுத்துறைத் திருத்த சட்டத்திற்கமைய அமைக்கப்பட்டுள்ள விளையாட்டுக் குற்றப்படுத்துப் பிரிவு இந்த விசாரணையை நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை ஊடகமொன்றுக்கு அண்மையில் கருத்து வெளியிட்டிருந்த முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, இலங்கையிலேயே அதிகளவான ஆட்ட நிர்ணயத்தில் ஈடுபடுகின்றவர்கள் இருக்கின்றனர் ர்னக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# கொரோனாவுக்கு மருந்தாக டெக்ஸாமெதசோன் அனுமதி!




## இந்திய சுகாதாரத்துறை தெரிவிப்பு

கொரோனா நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சையில் டெக்ஸாமெதசோன் மருந்தையும் சில கட்டுப்பாடுகளுடன், மருத்துவர்கள் பயன்படுத்தலாம் என்று இந்திய மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் அனுமதியளித்துள்ளது. முதல் மோசமான நிலையில் இருக்கும் நோயாளிகளின் உயிர்காக்க மட்டுமே இந்த மருந்தைப் பயன்படுத்த வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை முதல் மோசமானநிலையில்இருக்கும்கொரோனா நோயாளிகளுக்கு மெதில்பிரட்னிசோலன் மருந்து வழங்கப்பட்டுவந்தது. அதற்கு மாற்றாகவே டெக்ஸாமெதசோன் மருந்தை இந்திய சுகாதாரத்துறை அமைச்சகம் தற்போது பரிந்துரைத்துள்ளது.



இதுகுறித்து மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் வெளியிட்ட அறிவிப்பில் 'டெக்சாமெத சோன் மருந்து ஏற்கெனவே நுரையீரல் தொற்றுக்குப் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதுமட்டுமல்லாமல் எதிர்ப்பு அழற்சி, நோய் எதிர்ப்பு தடுப்பு விளைவுகள் ஆகியவற்றுக்காகவும் வழங்கப்பட்டு வருகிறது. இந்த மருந்தைத் தற்போது கொரோனா நோயாளிகளில் மிதமான பாதிப்பு முதல் மோசமான நிலையில் இருப்போருக்கு மெதில்பிரட்னிசோலன் மருந்துக்கு மாற்றாகப் பயன்படுத்தலாம். அழற்சி குறியீடு உடலில் தென்பட்டால் மட்டுமே அனுமதிக்கப்பட்ட 48 மணிநேரத்துக்குள் வழங்கலாம்.

இருப்பினும் நோயா ளியின் உடல் நலனைத் தொடர்ந்துமருத்துவர்கள் கண்காணிக்க வேண்டும்' எனத் தெரிவித்துள்ளது.

### டெக்ஸாமெதாசோன்

லண்டன்ஒக்ஸ்போா்ட்மருத்துவவல்லுநர்கள் பரிந்துரைக்கும் டெக்ஸாமெதசோன் மருந்து புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டது அல்ல. 1957ஆம் ஆண்டு பிலிப் ரோவால்டர் ஹென்ச் என்ற விஞ்ஞானியால் கண்டுபிடிக்கப்பட்டு 1961ஆம் ஆண்டு முதல் மருத்துவ உலகில் மருத்துவர்களால் பயன்பாட்டில் இருந்து வருகிறது. இந்த மருந்தை மருத்துவர்களின் ஆலோசனைப்படி இல்லாமல் சுயமாக எடுத்துக்கொள்ளுதல்கூடாது.



# படையெடுத்தன வெட்டுக்கிளிகள்!

இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தைத் தொடர்ந்து ஹரியாணா மாநிலத்தின் பல பகுதிகளிலும் நேற்று வெட்டுக்கிளிகள் படையெடுக்கத் தொடங்கின. இதையடுத்து அங்கு பூச்சி மருந்து தெளிக்கும் பணியில் அதிகாரிகள் ஈடுபட்டனர்.

இந்த மாத ஆரம்பத்தில் இந்தியப் பெருங்கடல் பகுதியில் பரவி யிருந்த பாலைவன வெட்டுக் கிளிகள் உத்தரபிரதேசம், ராஜஸ் தான், மத்திய பிரதேசம், குஜராத், பஞ்சாப் என இந்தியாவின் பல மாநிலங்களுக்கும் படை யெடுத்தன. இவை உணவுப் பயிர்களையும் தாவர இனங்க ளையும் நாசம் செய்து வரு கின்றன. ராஜஸ்தானில் பார்மர், ஜோத் பூர், பிகானீர், கங்காநகர், ஹனு மன்கர் ஆகியமாவட்டங்களில்தற்போது வெட்டுக்கிளிகள் கூட்டம் பெருந்திரளாகக் காணப்படுகிறன. இது விவசாயிகளுக்கு பெரும் வேதனையை அளித் துள்ளது.

உணவுப் பயிர்களை வெட்டுக்கிளிகள் நாசம் செய்து வருவதால், உற்பத்தி பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் ராஜஸ்தானைத் தொடர்ந்து ஹரியாணா மாநிலத்தின் பல பகுதிகளிலும் நேற்று வெட்டுக்கிளிகள் படையெடுக்கத் தொடங்கியுள்ளன. குருகிராம் உட்பட மாநிலத்தின் பல பகுதிகளிலும் நேற்று வெட்டுக்கிளிகள் காணப்பட்டன.

# அரசமைப்புச் சட்டம்தான் அரசுக்கு ஒளிவிளக்கு

## மோடி விளக்கம்



அரசமைப்புச் சட்டம்தான் அரசை வழிநடத்தும் ஒளிவிளக்கு. நம்பிக்கைகள், சாதி, மொழி, இனம் ஆகியவற்றை வைத்து இந்த அரசு பாகுபாடு காட்டாது. 130 கோடி மக்களின் விருப்பத்தின் அடிப்படையில் அரசு செயற்படுகிறது என்று இந்தியப் பிரதமர் மோடி தெரிவித்தார். கேரள மாநிலம் பத்தினம்திட்டாவில் ரேவ் ஜோஸப் மார் தோமாவின் 90 ஆவது பிறந்த நாள் நேற்றுக் கொண்டாடப்பட்டது.

அந்த நிகழ்ச்சியில் காணொலி மூலம் பிரதமர் மோடி பங்கேற்று மக்களுக்கு உரையாற்றினார். அப்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இந்த அரசு மக்களுக்கான எந்த முடிவுகளையும் எடுக்கும்போதும், டெல்லியில் உள்ள வசதியான அலுவலகங்களில் அமர்ந்து கொண்டு எடுக்கவில்லை. மக்களிடம் இருந்து கருத்துகளைக் கேட்டு அதன் அடிப்படையில்தான் முடிவுகளை எடுக்கிறோம். இந்த உற்சாகம்தான் ஒவ்வொரு இந்தியருக்கும் வங்கிக்கணக்கு தேவை என்பதை செயல்படுத்த ஊக்கமாக இருந்தது.

மக்களின் நம்பிக்கைகள், பாலினம், சாதி, மொழி, மதம் ஆகியவற்றின் அடிப்படையில் பிரித்துப் பார்த்து அரசு செயல்படவில்லை. 130 கோடி மக்களின் விருப்பத்துக்கு மதிப்பளித்துச் செயற்படுகிறோம். அரசமைப்புச் சட்டம்தான் இந்த அரசை வழிநடத்தும் ஒளிவிளக்கு - என்றார்.

# இந்தியாவுக்கு ஆதரவாக அமெரிக்கா படை அனுப்பும்

## மைக் பாம்பியோ தெரிவிப்பு



சீனாவின் அச்சுறுத்தலை எதிர்கொள்வதற்கு இந்தியாவுக்கு ஆதரவாகப் படைகளை அனுப்புவதற்கு அமெரிக்கா ஆலோசித்து வருவதாக மைக் பாம்பியோ கூறியுள்ளார்.

இந்தியா உள்ளிட்ட நாடுகள் சீனாவின் அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் வகையில் தனது உலகளாவிய படை பலத்தை அதிகரிப்பது குறித்துஅமெரிக்கா ஆலோசித்து வருவதாக அந்த நாட்டு வெளியுறவு அமைச்சர் மைக் பாம்பியோ மேலும் தெரிவித்தார்.

ஆசியப் பிராந்தியத்தில் சீனாவின் அச்சுறுத்தல்கள், அத்துமீறல்களைக் கட்டுப்படுத்தவும், சீனாவால் அச்சுறுத்தலுக்கு ஆளாகும் நாடுகளுக்கு ஆதரவாகவும் படைகளை அதிகரிக்க முடிவு செய்துள்ளதாக அமெரிக்கா கூறியிருந்த நிலையில், இந்தியாவுக்குச் சிறப்புரிமை அளித்துப் படைகளை அனுப்புவது குறித்து ஆலோசித்து வருவதாக மைக் பாம்பியோ தெரிவித்துள்ளார். 'பிரசல்ஸ் 2020 மன்றம்' நிகழ்ச்சியில் உரையாற்றும்போதே பாம்பியோ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# வடக்கில் தொடர் நடுக்கங்கள்!

கடந்த சில நாள்களாக இந்தியாவின் வடபகுதிகளில் தொடர்ச்சியாக நிலநடுக்கங்கள் உணரப்பட்டு வருகின்றன. ஜம்மு மற்றும் காஷ்மீரில் நேற்று 4.4 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் உணரப்பட்டது.

ஹான்லே நகரில் இருந்து வடகிழக்கே 332 கிலோ மீற்றர் தொலைவில் நேற்று மதியம் 12.32 மணியளவில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது என்று இந்தியத் தேசிய நிலநடுக்கவியல் மையம் தெரிவித்து உள்ளது.

லடாக்கின் கார்கில் பகுதியில் இருந்து வடமேற்கே 200 கிலோ மீற்றர் தொலைவில் ஏற்பட்ட மற்றொரு நிலநடுக்கம் 4.5 ரிக்டர் ஆகப் பதிவாகி இருந்தது. இதேபோன்று மேகாலயாவிலும் 3.3 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் நேற்று உணரப்பட்டது.

அரியானாவின் ரோக்தக் நகர் அருகே நேற்றுப் பிற்பகல் 3.32 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் 2.8 ஆகப் பதிவாகி இருந்தது. அரியானாவில் கடந்த 4 நாள்களில் 2ஆவது முறையாக நேற்று நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது.

**இந்தியாவின் சென்னை நகரத்தில் கொரோனா காரணமாகத் தனிமைப்படுத்தப்பட்ட நபர்களின் வீடுகள் தகரங்களால் மறைக்கப்படுகின்றன.**

**தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் பொது வெளியில் வருவதைத் தடுக்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

**இந்தத் தடுப்புகள் மன உளைச்சலை ஏற்படுத்துவதாகப் பாதிக்கப்பட்டவர்கள் கூறிகிறார்கள்.**







# சாதனை படைத்த மின்னல்!



700 கிலோ மீற்றர் தூரத்துக்கு நீண்டு மின்னல் ஒளிக்கீற்றுப் பாய்ந்து புதிய உலக சாதனை படைக்கப்பட்டுள்ளதாக உலக வானிலை அமைப்புத் தெரிவித்துள்ளது.

பிரேசில் நாட்டின் தென்பகுதியில் கடந்த ஆண்டு ஒக்ரோபர் 31ஆம் திகதி மின்னிய மின்னலே இவ்வாறு 700 கி.மீ. தூரத்துக்கு மேல் நீண்டது. அதற்கு முன்பு, ஒரே மின்னல் ஒளிக்கீற்று 321 கி.மீ. தூரத்துக்கு நீண்டதுதான் உலக சாதனையாகக் கருதப்பட்டது.





பூமியை விட 5 மடங்கு பெரிதான கரும் புள்ளிகளைச் சூரியனில் கண்டுபிடித்துள்ளதாகக் கூறியுள்ளனர் சார்ஜா வானியல், விண்வெளி அறிவியல் தொழில்நுட்ப ஆராய்ச்சி நிலைய ஆராய்ச்சியாளர்கள்.

புள்ளி உள்ள இடத்தில் வெப்பம் குறைந்த அளவுக்கு இருக்கலாம் என்றும் தெரிவித்தனர்.

# கிம் குறித்துச் சந்தேகம் எழுப்புகிறது ஜப்பான்

வடகொரியா அதிபரின் உடல் நிலை குறித்து சந்தேகங்கள் ஏற்பட்டிருப்பதாக ஜப்பான் கூறியுள்ளது.

இதனால் மீண்டும் கிம் ஜோங் உன்னைப் பற்றிய சந்தேகங்கள் எழத்தொடங்கியுள்ளன. வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன், சில நாள்கள் பொதுவெளியில் தென் படாமல் இருந்ததால், அவர் இறந்துவிட்டதாகவும், அவரின் உடல் நிலை சரியில்லாத காரணத்தால், இதய அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளதாகவும் சில மாதங்களுக்கு முன்பு செய்திகள் வெளியாகின.

ஆனால் அது எல்லாம் பொய் என்று நிரூபிக்கும் வகையில்,



அவர் வடகொரியாவின் தொழிற்சாலை திறப்பு விழாவில் கலந்து கொண்டார். அதன் பின் சில நாள்கள் கழித்து அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். இதைத் தொடர்ந்து தென்கொரியாவுடன், மோதல் போக்கு நிலவி வருகிறது. இதற்காக பல்வேறு நடவடிக்கைகளைவடகொரியாஎடுத்துவருகிறது. இப்படி திடீரென்று வடகொரியாவில் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், ஜப்பானின் பாதுகாப்பு அமைச்சர் டரோ கொனோ, வடகொரியாவில் சமீபத்திய இயக்கங்கள் அனைத்தும் மிகவும் விசித்திரமானவையாக உள்ளன என்றும் அந்த நாட்டின் தலைவரான கிம் ஜோங் உன்னின் உடல் நலம் குறித்து எங்களுக்கு சில சந்தேகங்கள் உள்ளன. கிம் நோய்த் தொற்று ஏற்படாமல் இருக்க முயற்சித்து வருகிறார். ஏனெனில் வடகொரியா முழுவதும் வைரஸ் பரவுகிறது என்று கூறியுள்ளார்.

# பிரிட்டனைத் தொடர்ந்து ஸ்கொட்லாந்தில் குத்து!



ஸ்கொட்லாந்து நகரமான கிளாஸ்கோவில் பொலிஸார் உட்பட 6 பேரை ஒருவர் கத்தியால் குத்தியுள்ளார். நகரின் மத்தியிலுள்ள பொது நிலையம் ஒன்றில் இந்தச் சம்பவம் நடந்தது. கத்திக் குத்துக்கு இலக்காகியவர்களுக்கு அதிகளவு குருதி வெளியேறிய நிலையில் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலை நடத்தியவர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். கத்திக்குத்துக்கு இலக்கான பொலிஸ் அதிகாரிக்கு ஆபத்து இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சம்பவத்தைப் பயங்கரவாதமாகக் கருதவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கிளாஸ்கோவில் நடந்த சம்பவம் மிகுந்த வருத்தமளிக்கின்றது என்று பிரிட்டனின் பிரதமர் போரிஸ் ஜோன்சன் கூறினார். கடந்த வாரம், பிரிட்டனின் ரீடிங் நகரில் பூங்கா ஒன்றில் நடந்த கத்திக்குத்துச் சம்பவத்தில் மூன்று பேர் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கொரோனாவுக்கு மத்தியில் கடலில் சீனா ஆதிக்கம்

கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில் சர்ச்சைக்குரிய தென்சீனக் கடலில் சீனா தனது நடவடிக்கையை முடுக்கிவிட்டுள்ளது.

இதனால் கொரோனாக் கவலைக்கு மத்தியில் தென்கிழக்கு ஆசியாவில் பாதுகாப்பற்ற தன்மை அதிகரித்து வருவதாக வியட்நாம் மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகள் எச்சரித்தன.

வியட்நாம் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளும் தென்சீனக் கடலில் உரிமை கோருகின்ற நிலையில் அந்தப் பகுதியில் புதிய தீவுகளை உருவாக்குவதாகச் சீனா ஒருதலைப்பட்சமாக அறிவித்தது. இதையடுத்தே வியட்நாமும் பிலிப்பைன்ஸும் சீனாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்தன. தொற்றுநோய்க்கு எதிரான போராட்டத்தில் முழு உலகமும் இருந்தாலும், சர்வதேச சட்டத்தை மீறும் பொறுப்பற்ற செயல்கள் மூலம் எங்கள் பிராந்தியத்தில் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையின் சூழலைச் சீனா பாதிக்கிறது' என்று மேற்படி நாடுகள் தெரிவித்தன.

# எகிப்து, எதியோப்பியா, சூடான் இடையே நைல் அணை ஒப்பந்தம்



எகிப்து, எதியோப்பியா, சூடான் ஆகியவை இரண்டு முதல்மூன்றுவாரங்களில் பிரம்மாண்டமான நைல் நதி அணை குறித்த ஒப்பந்தம் ஒன்றை எட்டுவதற்குத் தயாராகின்றன. ஆபிரிக்க ஒன்றியம்மத்தியஸ்தம் செய்ததைத் தொடர்ந்து, ஒரு தசாப்த காலமாக நீடித்த நீர்ப்பிரிப்பு, நீர் வழங்கல் தொடர்பான சர்ச்சையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான இந்த முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

எகிப்து, எதியோப்பியா, சூடான் ஆகிய நாடுகளிடையே நைல் அணையை எவ்வாறு இயக்குவது என்பது குறித்துப் பல ஆண்டுகளாகக் கடுமையான பேச்சு வார்த்தைகள் நடந்துவந்தன. அதன் தொடர்ச்சியாகவே இந்த நீர்த்தேக்கத்தை நிரப்புவதையும் அதைக் கட்டுப்படுத்துவதையும் நடைமுறைப்படுத்துவதற்கு ஒப்பந்தம் ஒன்றை உருவாக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# மெக்சிக்கோவில் பொலிஸார் மீது சூடு போதைப் கடத்தல்காரர்கள் துணிகரம்

மெக்ஸிக்கோ நகரப் பொலிஸ் தலைமை அதிகாரி சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது மெய்க்காப்பாளர்கள் இருவரும் படுகொலை முயற்சியில் கொல்லப்பட்டனர்.

மெக்ஸிக்கோவின் போதைப்பொருள் கும்பல்களில் ஒன்றான 'ஜலிஸ்கோ நியூ ஜெனரேன் கார்டெல்' இந்தக் கொலைச்சம்பவத்தில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மெக்ஸிக்கோ நகர்ப்புறத்தில் தலைமை அதிகாரியும் மெய்க்காப்பாளர்களும் சுட்டுக்கொல்லப்பட்டமை அங்கு பதற்றத்தையளித்துள்ளது. இது மெக்ஸிக்கோவில் நடந்த துன்பகரமான வன்முறை என்று பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. போதைப் பொருள் கடத்தல்காரர்களின் அட்டகாசம் அங்கு தொடர்ந்து அதிகரித்து வருவதால் பொலிஸார் அவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளது.

துப்பாக்கிச் சூடு நடத்தியவர்கள் தப்பி ஓடிவிட்டனர் என்றும் விரைவாக நடந்த சுற்றிவளைப்பில் 12 சந்தேக நபர்கள் தலைநகரின் எல்லையில் உள்ள பகுதியில் பிடிபட்டனர் என்றும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.





- பனங்காட்டன் -

# கூட்டமைப்பில் மீளச்சேர்க்க மாவையர் விரும்புபவர்களை தேர்தலில் தோற்கடிக்குமாறு சம்பந்தன் வேண்டுகிறார்!

கூட்டமைப்பிலிருந்து வெளியேறியவர்களைத் தேர்தலின் பின்னர் மீண்டும் இணைத்துக் கொள்ளப் போவதாக தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா கூறிவருவதும், கூட்டமைப்பிலிருந்து வெளியேறி கூட்டமைப்புக்கு எதிராகப் போட்டியிடுபவர்களை தோற்கடிக்குமாறு கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் மக்களிடம் வேண்டிவருவதும் ஒன்றுக் கொன்று முரணாக இருக்கிறது.

திரிகரணசுத்தி இல்லாதவர்களின் வாய்மையை எவ்வளவு காலந்தான் மக்கள் நம்புவது?

இலங்கை அரசியலில் குள்ளநரி என்று வர்ணிக்கப்படும் ஜே.ஆர்.ஜெயவர்த்தன 1978 ஆம் ஆண்டு புதிய அரசமைப்பை உருவாக்கியபோது திடமாக ஒன்றை நம்பினார்.

விகிதாசார வாக்கு முறையின் கீழ் தேர்தலை நடத்தினால் ஐக்கிய தேசிய கட்சியே தொடர்ந்து ஆட்சியைக் கைப்பற்றும் என்பது அவரின் அசைக்க முடியாத நம்பிக்கையாகவிருந்தது.

1977 ஆம் ஆண்டு வரையான சகல தேர்தல்களும் தொகுதி அடிப்படையில் நேரடிப் போட்டியாக இருந்த வேளை, அந்தத் தேர்தல்களில் ஐக்கிய தேசிய கட்சி தோல்வியடைந்த காலங்களிலும் மொத்த வாக்குகளின் எண்ணிக்கையில் அக்கட்சிக்கே கூடிய வாக்குகள் கிடைத்தன.

இதனடிப்படையில் விகிதாசார முறையை அறிமுகப்படுத்தினால் தனது ஐக்கிய தேசிய கட்சி தொடர்ந்து சகல தேர்தல்களிலும் ஆட்சியைக் கைப்பற்றுமென அவர் நம்பியதில் தவறில்லை. ஆனால், அவரது எண்ணம் அப்படியே நிறைவேறவில்லை.

அவரைத் தொடர்ந்து 1989இல் பிரேமதாச ஜனாதிபதியான பின்னர், ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்த எவரும் ஜனாதிபதியாக வரவில்லை.

சந்திரிகா குமாரதுங்க இரு தடவையும், மஹிந்த ராஜபக்ஷ இரு தடவைகளும், மைத்திரிபால சிறிசேன ஒரு தடவையும் ஜனாதிபதியான பின்னர் கடந்த வருடத் தேர்தலில் கோட்டாபய அப்பதவிக்கு வந்தார். இவர்கள் எவருமே ஐக்கிய தேசிய கட்சியினர் அல்ல.

விகிதாசார ரீதியான நாடாளுமன்றத் தேர்தல்களில் ஒரு தடவை மட்டுமே (2001 - 2004) ஐக்கிய தேசிய கட்சி வெற்றி பெற்று ரணில் விக்கிரமசிங்க பிரதமரானார். 2015இலும் இவர் பிரதமரான போதிலும் சுதந்திரக் கட்சியின் சந்திரிகா, மைத்திரிபால சிறிசேன ஆகியோரின் கூட்டு அங்கிருந்தது.

> இந்த மாதம் தேர்தல் நடைபெறுமானால் வடக்கிலும் கிழக்கிலும் கூட்டமைப்புக்கு ஆகக்கூடியதாக பதினொரு ஆசனங்களே கிடைக்குமென அரசியல் நோக்கர்கள் ஆரூடம் கூறுகின்றனர். தேர்தலுக்கு இன்னமும் ஒரு மாதத்துக்கு மேலாக இருப்பதால், இந்த எண்ணிக்கை முன்னுக்குப் பின்னாக மாறக்கூடும். அதனைப் பொறுத்தே தேசியப் பட்டியல் எண்ணிக்கை தெரியவரும்.

ஆனால், இந்த விகிதாசார முறை வடக்கு கிழக்கில் எதிர்பாராத சில மாற்றங்களை ஏற்படுத்தியது. முக்கியமாக, 2001 இல் தமிழீழ விடுதலைப் புலிகளால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட பின்னர் ஒரே தலைமையில் பல தமிழர் பிரதிநிதிகள் நாடாளுமன்றம் செல்லும் வாய்ப்பு தொடர்ச்சியானது.

இந்தப் பின்னணியை வைத்து, இப்போது தமிழ் அரசியல் அரங்கில் எழுப்பப்படும் சில கேள்விகளுக்கும், தமிழரசுக் கட்சிக்குள் உருவாகியுள்ள பனிப்போருக்கும், மாற்று அணிகள் களத்தில் இறங்கியுள்ள தேவைகளுக்கும் பொதுமக்கள் பதில் காண வேண்டிய கட்டாயம் உருவாகியுள்ளது.

கூட்டமைப்பின் தலைமைக் கட்சியான தமிழரசு இப்போது மூன்று பிரிவுகளாகியிருப்பது பகிரங்கமான விடயம். என்ன சொல்லியும் இதனை எவராலும் மறைக்க முடியாது. ஏனெனில், முன்னாள் எம்.பி.க்கள் அனைவரும் இப்போது வாக்கு வேட்டையில் இறங்கி வீதிகளில் நிற்கின்றனர்.

தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, யாழ். உதயன் பத்திரிகையின் நிர்வாகி ஈ.சரவணபவன் ஆகியோருடன் புதிதாக களத்தில் இறக்கப்பட்டுள்ள சசிகலா ரவிராஜ் (காலஞ்சென்ற எம்.பி. நடராஜா ரவிராஜின் மனைவி) ஆகிய மூவரும் ஓர் அணியாகப் பார்க்கப்படுகின்றனர்.

சில வாரங்களுக்கு முன்னர் எதிரும் புதிருமாகவிருந்த எம்.ஏ.சுமந்திரனும், சிவஞானம் சிறீதரனும் ஏதோவொரு கனவான்கள் ஒப்பந்தத்தின் கீழ் இணைந்துள்ளனர். தேர்தலின் பின்னர் மாவையரின் தமிழரசுத் தலைவர் பதவியை இவர்களில் ஒருவர் இலக்கு வைத்திருப்பதாக களநிலை விமர்சகர்கள் கூறுகின்றனர்.

புளொட் தலைவர் சித்தார்த்தன் தமது தந்தையான காலஞ்சென்ற வி. தர்மலிங்கம் எம்.பி.யின் நிழலில் இம்முறையும் வெற்றிபெறும் உறுதியில் எந்தப்பக்கமும் சாராது, பட்டும் படாததும் போன்ற அறிக்கைகளுடன் தனிஆவர்த்தனம் புரிகிறார்.

வன்னியில் மன்னாரைத் தளமாகக் கொண்ட செல்வம் அடைக்கலநாதனும், சார்ள்ஸ் நிர்மலநாதனும் கத்தோலிக்க மதபீடத்தின் பலத்துடன் வெற்றிக்குரியவர்களாகவுள்ளனர். இங்கு முன்னர் எம்.பி.யாகவிருந்த மற்றிருவர் தமக்குள் போட்டியிடுகின்றனர்.

மட்டக்களப்பில் வடக்குப் போன்ற உள்வீட்டு மோதல் நிலைமை பெரிதளவில் காணப்படவில்லை. எனினும், இங்கு மூவரும், திருமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் தலா ஒவ்வொருவருமாக கிழக்கில் மொத்தம் ஐவர் கூட்டமைப்பில் வெல்வதற்கான சாத்தியம் காணப்படுகிறது.

யாழ்ப்பாண மாவட்ட ஏழு இடங்களில் கூட்டமைப்புக்கு ஆகக்கூடியதாக நான்கு இடங்களே (சிலவேளை மூன்றாகவும் குறையலாம்) கிடைக்குமென்றும், வன்னியில் ஆறு இடங்களில் கூட்டமைப்புக்கு மூன்றே சாத்தியமென்றும் இப்போதைய நிலைவரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த மாதம் தேர்தல் நடைபெறுமானால் வடக்கிலும் கிழக்கிலும் கூட்டமைப்புக்கு ஆகக்கூடியதாக பதினொரு ஆசனங்களே கிடைக்குமென அரசியல் நோக்கர்கள் ஆரூடம் கூறுகின்றனர்.

தேர்தலுக்கு இன்னமும் ஒரு மாதத்துக்கு மேலாக இருப்பதால், இந்த எண்ணிக்கை முன்னுக்குப் பின்னாக மாறக்கூடும். அதனைப் பொறுத்தே தேசியப் பட்டியல் எண்ணிக்கை தெரியவரும். இந்நிலையில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் இரண்டு விடயங்களை மீளமீள முன்னிலைப்படுத்தி வருகிறார்.

'தமிழ் மக்களின் அரசியல் தலைமை கூட்டமைப்பு மட்டுமே. அப்படியிருக்க மற்றைய தமிழ் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் எதற்காக கூட்டமைப்பை விமர்சிப்பதையே தங்கள் பிரதான தொழிலாகக் கொள்ள வேண்டும்? கூட்டமைப்பைப் பார்த்து கேள்வி கேட்பதுதான் இவர்கள் வேலையா? தமிழ் மக்களுக்கு இவர்கள் இதுவரை என்ன செய்தார்கள்? - என்பது இவர் தொடர்ந்து அடுக்கி வரும் கேள்விகள்.

இந்தக் கேள்விகளுக்கு என்ன பதில் என்பது சம்பந்தனுக்குத் தெரியாததல்ல.

தமிழர் தாயகத்திலிருந்து மொத்த அடிப்படையில் ஒரே அணியாக கடந்த இரண்டு தசாப்தங்களாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவானவர்கள் கூட்டமைப்பினரே.

எங்கிருந்தோ அரூபமாகக் காட்டப்பட்ட ஒரு விரலின் அசைவுக்கிணங்க, தமிழ் மக்கள் தங்கள் வாக்குகளை அள்ளிப்போட்டு கூட்டமைப்பினரையே தங்கள் ஏகபிரதிநிதிகளாகத் தெரிவு செய்து நாடாளுமன்றம் அனுப்பினார்கள்.

அவ்வாறு தெரிவாகி ஒரே அணியாக வென்றவர்கள் இதுவரை தமிழர்களின் அரசியல் அபிலாசைகள் உட்பட முக்கிய விடயங்களில் என்ன செய்தார்கள் என்று கேட்பதும், ஏன் சிலவற்றைச் செய்யவில்லை என்று கேட்பதும் தவறா? வெற்றி பெற்றவர்களை விடுத்து தோற்றுப் போனவர்களிடமா இதனைக் கேட்க முடியும்?

என்ன கேட்கிறார்கள் அல்லது விமர்சிக்கிறார்கள் என்பதைத் தவிர்த்து, யார் இதனைச் செய்கிறார்கள் என்று பார்ப்பதும் - அவர்களை நோக்கி தவறான முறையில் விமர்சிப்பதும் ஏற்புடையதல்ல.

பழுத்த அரசியல்வாதியென்று மகுடம் சூட்டப்படும் சம்பந்தன், பொதுமக்கள் தரப்பிலிருந்து எழுப்பப்படும் கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியாது அவர்களிடம் பதில்கேள்வி கேட்கக்கூடாது, கோபப்படவும் கூடாது.

இல்லை, இப்படித்தான் கூறுவேன் என்று அடம் பிடிப்பாரானால், அவர் நம்பிக்கையுடன் கூறும் இருபது ஆசனங்களை கூட்டமைப்பினால் எவ்வாறு பெற முடியும்? இந்த இலக்கு பகற்கனவு என்று தெரிந்து கொண்டும் பழக்கதோம்போல வழக்கமான நம்பிக்கை அடிப்படையில் இதனைக் கூறக்கூடாது.

கூட்டமைப்பின் தற்போதைய பரப்புரைக் களத்தில் மாவை சேனாதிராஜா திருவாய் மலர்ந்தருளியிருக்கும் ஒரு விடயம் முக்கியத்துவம் பெறுகிறது.

கூட்டமைப்பிலிருந்து முன்னர் வெளியேறியவர்களை தேர்தல் முடிந்த பின்னர் மீள இணைத்து அடுத்த கட்டத்துக்கு நகர வேண்டுமென்று தெரிவித்துள்ளார். இதனை அவர் திரிகரணசுத்தியுடன் சொன்னாரா, அல்லது வழக்கமான 'மீண்டும் போர் வெடிக்கும் என்று மக்களை உசுப்பிவிடும் பாணியில் கூறினாரா என்பது அவருக்குத்தான் தெரியும்.

கூட்டமைப்பு என்பது எல்லோரையும் கூட்டி இணைத்ததாக இருக்க வேண்டுமென்ற உயர்ந்த சிந்தனையில் அவர் கூறியிருப்பாரென்பது உண்மையானால், சில முக்கிய விடயங்களை இங்கு அணுக வேண்டும்.

முன்னாள் முதலமைச்சர் விக்கினேஸ்வரன் உட்பட எவரையும் தாங்கள் கூட்டமைப்பிலிருந்து வெளியேற்றவில்லையென்றும், அவர்கள் ஏன் வெளியேறினார்கள் என்பது தமக்குத் தெரியாது என்றும் சம்பந்தன் அண்மையில் கூறியிருந்தார். துர்அதிர்ஷ்டமாகக் கூட்டமைப்பிலிருந்து பலர் வெளியேறியிருப்பது தமக்குக் கவலையளிப்பதாக (காலங்கடந்த ஞானம்) மாவையர் சில தினங்களுக்கு முன்னர் கூறியிருந்தார்.

தர்க்கரீதியில் இவர்கள் கூறுவதை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால், உண்மை அதுவல்ல. கூட்டமைப்பு தேர்தல் கொள்கைகளைக் கைவிட்டதாலும், ஒரு சிலரின் விருப்பப்படியே அங்கு முடிவுகள் எடுக்கப்பட்டதாலும் அவர்கள் கூட்டமைப்புக்குள் இருக்க முடியாத வாறு தாங்கள் தாங்களாகவே வெளியேற வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டனர் என்பதே யதார்த்தம்.

(11 ஆம் பக்கம் பார்க்க)






# கரித்தாஸ் கியூடெக் நிறுவனம் நெடுந்தீவில் நிவாரணப் பணி

யாழ்ப்பாணம் கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் கொவிட் - 19 நிவாரணப் பணி நெடுந்தீவு பிரதேசத்தில் நிறுவன இயக்குனர் எஸ். இயூஜின் பிரான்சிஸ் அடிகளாரின் வழிகாட்டலுக்கு அமைவாக நிறுவனப் பணியாளர்களினால் மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி உதவித்திட்டம் ஜூன் 20 ஆம் திகதி அன்று நெடுந்தீவுப் பங்குத்தந்தை அருள்தாஸ் அடிகளார் தலைமையில் யுவானியார் ஆலயத்தில் வழங்கப்பட்டது.

இந்த உதவித்திட்டத்தின் கீழ் மாற்று வலுவுள் ளோர், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மற்றும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்கள் உள்ளடங்கலாக 60 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள், சுகாதார தொற்று நீக்கித் திரவம், சவர்க்காரம், முகக்கவசம், வீட்டுத் தோட்ட விதைகள், சுகாதார விழிப்புணர்வு துண்டுப்பிரசுரங்கள் என்பவை வழங்கி வைக்கப்பட்டன.

உதவித்திட்டத்தை பெற்றுக் கொண்ட மக்கள் கரித்தாஸ் கியூடெக் நிறுவன இயக்குனர் எஸ். இயூஜின் பிரான்சிஸ் அடிகளாருக்கு தமது மனப்பூர்வமான நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.

# புனித திருமுழுக்கு யோவானின் பிறந்தநாள் புதனன்று அனுஷ்டிப்பு

கடந்த 24 புதன் அன்று புனித திருமுழுக்கு யோவானின் பிறந்தநாள் சிறப்பிக்கப்பட்டதையொட்டி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வழங்கிய மறைக்கல்வி உரையின் இறுதியில், இப்புனிதரைக் குறித்து ஒரு சில கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டார்.

புனித திருமுழுக்கு யோவானின் பிறந்தநாளை சிறப்பிக்கும் வேளையில் நற்செய்தியை எடுத்துரைக்கும் துணிவை இப்புனிதரிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டும் என்றும் நம்மிடையே உள்ள வேற்றுமைகளின் நடுவே ஒருங்கிணைப்பையும் நட்பையும் வளர்ப்பதன் வழியே நம் நற்செய்தி அறிவிப்பு இன்னும் நம்பத்தகுந்ததாக மாறும் என்றும் திருத்தந்தை எடுத்துரைத்தார்.

மேலும், இத்திருநாளையொட்டி திருத்தந்தை வெளியிட்ட டுவிட்டர் செய்தியில் வயதில் முதிர்ந்த பெற்றோரிடமிருந்து திருமுழுக்கு யோவான் பிறந்தது கடவுள் மனித அறிவையும், சக்தியையும் கடந்தவர் என்பதைச் சொல்லித்தருகிறது. இறைவனின் மறையுண்மைக்கு முன், பணிவுடன் அமைதி காக்கவும், அவரை நம்பவும் நாம் கற்றுக்கொள்ளவேண்டும் என்ற சொற்கள் பதிவாகியிருந்தன.

மேலும் ஜூன் 24 ஆம் திகதி புனித திருமுழுக்கு யோவானின் பிறந்த நாள் சிறப்பிக்கப்பட்ட வேளையில் உரோம் நகரில் உள்ள புனித ஜான் இலாத்தரன் பெருங்கோவிலில் ஒரு சிறப்புத் திருப்பலியை, கர்தினால் அஞ்சேலோ தே தொனாத்திஸ் அவர்கள் தலைமையேற்று நடத்தினார்.

உரோம் மறைமாவட்ட ஆயரான திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் பிரதிநிதியாக இம்மறைமாவட்டத்தின் தலைமை பொறுப்பை ஏற்றுள்ள கர்தினால் தே தொனாத்திஸ் அவர்கள், இம்மறைமாவட்டத்தில், அருள்பணியாளர்களாக 25, 50 மற்றும் 60 ஆண்டுகளை நிறைவு செய்துள்ள அருள்பணியாளர்களுடன் இணைந்து இந்த நன்றித் திருப்பலியை நிறைவேற்றினார்.

காலைக்கதிர் Kalaikathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி – யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
- ஊடக விரிவுரையாளர்

# மன்னார் மூத்த குருவானவர் ஜே.பி. தேவராஜா அடிகளாரின் 90ஆவது பிறந்த தின நிகழ்வு மன்னார் மறைமாவட்டத்திலும்




மன்னார் மறைமாவட்டத்தின் மூத்த குருவானவர் ஜே.பி. தேவராஜா அடிகளாரின் 90ஆவது பிறந்த தின கொண் டாட்டம் மன்னார் மறைமாவட் டத்திலும் இடம்பெற்றது.

மன்னார் மறைமாவட்டத் தின் மூத்த குருவானவர் ஜோசப் பெனடிக்ட் தேவராஜா அடிக ளார் 16 ஜூன் 2020 அன்று அகவை 90 ஐத் தொட்டார். தாய் மறைமாவட்டமான யாழ் மறைமாவட்ட ஆயர் இல்ல சிற்றாலயத்தில் நடந்த நன் றித் திருப்பலியைத் தொடர்ந்து கொண்டாட்டங்கள் மன்னார் மறைமாவட் டத்திலும் நடை பெற்றன. மேற்படி பிறந்த நாள் கொண்டாட்டத்தில் யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் கலாநிதி பி.ஜே.ஜெபரட்ணம் அடிகளார், முன்னாள் திரு கோணமலை மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை, மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண் டகை, அகவை 90ஐ தொட்ட ஜே.பி. தேவராஜா அடிகளார், யாழ் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை ,மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் விக்ரர் சோசை அடிகளார் ஆகியோர் கலந்து வாழ்த்து தெரிவித்து சிறப்பித்தார்கள். அந்தப் படத் தையே 'காலைக்கதிர் கிறிஸ் தவ செய்தி இதழ்' அன்பு நெஞ்சங்களின் பார்வைக்குத் தருகிறோம்.

மேற்படி பிறந்தநாள் கொண்டாட்டத்தில் முன்னாள் யாழ் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, முன்னாள் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி இராயப்பு யோசவ் ஆண்டகை ஆகியோரும் கலந்து கொண்டனர்.

90 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடும் மன்னார் மறைமாவட்டத்தின் மூத்த குருவானவர் ஜோசப் பெனடிக்ட் தேவராஜா அடிகளாருக்கு காலைக்கதிர் கிறிஸ்தவ செய்தி இதழ் அன்பு நெஞ்சங்களின் இனிய பிறந்தநாள் வாழ்த்துகள்.

# திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ட் திங்கள் வத்திக்கான் திரும்பினார்




ஜேர்மனியில் நோயுற்றுள்ள தன் உடன்பிறப்பான ஜோர்ஜ் இராட்சிங்கர் அடிகளாரைப் பார்ப்பதற்காக அந்நாடு சென்ற முன்னாள் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்கள் 22 ஜூன் 2020 திங்கள் அன்று வத்திக்கான் திரும்பியுள்ளார். 96 வயது நிரம்பிய தன் சகோதரர் ஜோர்ஜ் இராட்சிங்கர் அடிகளாருடன் ஐந்து நாள்கள் தங்கியிருந்த திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்கள் அவரின் பெற்றோர் மற்றும் மூத்த சகோதரியின் கல்லறைகளையும் தரிசித்து சிறிதுநேரம் செபித்தார். புனிதத்தண்ணீரை அந்த கல்லறைகள் மீது தெளித்து ஆசீரும் அளித்தார் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட்.

ஊரில் தனது குடும்பம் வாழ்ந்த இல்லத்தையும் பார்வையிட்டார் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்கள். இவர் 1977ஆம் ஆண்டில் உயர்மறைமாவட்டத்திற்குப் பேராயராக நியமிக்கப்படுவதற்குமுன் இந்த இல்லத்தில் தங்கிக்கொண்டு, கோட்பாட்டு இயல் பேராசிரியாரகப் பணியாற்றினார். இந்த இல்லம் தற்போது இவரின் இறையியல் கருவூலத்தைப் பராமரிக்கும் 16ஆம் பெனடிக்ட் நிறுவனத்தின் தலைமையிடமாக அமைந்துள்ளது.

ஜேர்மனியில் நோயுற்றுள்ள தன் உடன்பிறப்பான ஜோர்ஜ் இராட்சிங்கர் அடிகளாரைப் பார்ப்பதற்காக முன்னாள் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்கள் வத்திக்கானில் பணியாற்றும் ஒரு சிறிய குழுவுடன் அந்நாடு சென்றார் என்பது தெரிந்ததே. திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்கள் தன் தனிப்பட்ட உதவியாளர், பேராயர் உடன் வத்திக்கான் காவல்துறையின் உதவித்தலைவர், திருத்தந்தையைப் பராமரிக்கும் ஒரு மருத்துவர் ஒரு செவிலியர் மற்றும் உடன் உழைப்பாளர்களுடன் நோயுற்றிருக்கும் தன் சகோதரர் ஜோர்ஜ் அடிகளாருடன் இருப்பதற்காக ஜெர்மனிக்குச் சென்றார்.

இந்நிகழ்வு முற்றிலும் தனிப்பட்டது என்பதால் யாரும் தங்களைச் சந்திப்பதற்கு முயற்சிக்கவேண்டாம் என முன்னாள் திருத்தந்தையும் அவரது சகோதரரும் கேட்டுக்கொண்டுள்ளனர். 96 வயது நிரம்பிய ஜோர்ஜ் இராட்சிங்கர் அடிகளாருக்கும் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்களுக்கும் மூன்று வயது வித்தியாசம் உள்ளது.

# போராட்டத்தில் சம்பந்தப்படாதவர்கள் நாடாளுமன்றக் குழு எனும் அதிகாரத்தோடு தமிழ் மக்களின் தலைவிதியைத் தீர்மானிக்க முயற்சி

## மக்களின் குற்றச்சாட்டு அது என்கின்றது புளொட்டின் அறிக்கை

கூட்டமைப்புக் குறித்து கடந்த சில வருடங்களாக பொது வெளியில் முன்வைக்கப்பட்ட விமர்சனங்களை உறுதியாக மறுதலிக்க முடியாத வகையிலேயே கூட்டமைப்பின் சில உறுப்பினர்களின் செயற்பாடுகள் அமைந்திருந்தன என்பதையும் நாம் மனச்சாட்சியுடன் ஏற்றுக்கொள்கிறோம். கூட்டமைப்பின் பதிவு தொடர்ச்சியாக தள்ளிப் போவதும், போராட்டத்தில் சம்பந்தப்படாதவர்கள் நாடாளுமன்றக் குழு எனும் அதிகாரத்தோடு தமிழ் மக்களின் தலைவிதியை தீர்மானிக்க முயற்சிப்பதுமே குற்றச்சாட்டுகளின் அடிப்படையாக அமைந்திருக்கின்றன.

– இவ்வாறு ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் (புளொட்டின்) தகவல், பிரச்சார வெளியீட்டுப் பிரிவு நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'மாற்று அமைப்புகளுக்கான ஆதரவு தமிழினத்திற்கு அழிவையே தரும்;

கூட்டமைப்பின் மூலமே நாம் விரும்பும் மாற்றத்தை ஏற்படுத்துவோம்' – என்ற தலைப்பில் வெளியான இந்த அறிக்கையில் கூறப்பட்டவை வருமாறு:–

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்) ஆகிய நாம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிடுகிறோம்.

முப்பதாண்டு கால ஆயுதப் போராட்டம் முடிவடைந்த பின்பு, கடந்த பத்தாண்டுகளாக முன்னெடுக்கப்பட்டு வந்த தமிழர்களின் போராட்ட வழிமுறைகள் எதிர்பார்த்த அளவு பலனை எமது மக்களுக்கு கொடுக்கவில்லை.

வன்னியிலும், கிழக்கு மாகாணத்திலும் இன நல்லிணக்கத்தின் பெயராலும், நல்லாட்சியின் பெயராலும் முன்னெடுக்கப்பட்ட அரசியல் மற்றும் சமூக அபிவிருத்தி நடவடிக்கைகள் யாவும் தமிழர்களின் இருப்பை பலவீனப்படுத்துகின்ற, அச்சுறுத்துகின்ற வகையிலேயே திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்டிருந்தன.

அடுத்த நாடாளுமன்றத்தில், சிறுபான்மை இன மக்களுக்கு பாதுகாப்பாயுள்ள சட்டங்களை நீக்கும் நோக்கோடு, மூன்றில் இரண்டு பெரும்பான்மையை இலக்கு வைத்து, பேரினவாத நிகழ்ச்சி நிரலை விரைவாக நடைமுறைப்படுத்தத் துடித்துக் கொண்டிருக்கும் தற்போதைய ஆட்சியாளர்களின் 'செயலணி' செயற்பாடுகள் கூட கடந்த காலங்களைவிட மிக வேகமாக முன்னெடுக்கப்படுகின்றன.

நல்லிணக்கம் என்ற பெயரில் முஸ்லீம் தலைவர்களுடன் எமது தலைவர்கள் சிலர் செய்து கொண்ட உடன்படிக்கைகள் முஸ்லிம்களால் உதாசீனபடுத்தப்பட்டிருந்தமையோடு துரோகமும் இழைக்கப்பட்டிருந்தது. நாட்டின் இரண்டு பிரதான கட்சிகளால் உருவாக்கப்பட்ட நல்லாட்சி அரசாங்கத்தில் நல்லதே நடக்கும், தீர்வு வரும் என்று கூற வைக்கப்பட்டு எமது மக்களும் அவர்களது நாடாளுமன்றப் பிரதிநிதிகளும் ஏமாற்றப்பட்டிருந்தனர்.

ஆனாலும் கடந்த பத்தாண்டுகளாக ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்) இன் தலைமைத்துவம் மட்டுமே தமிழர்களுக்கு பாதகமான சிங்கள அரசியல் தலைவர்களின் எண்ணங்களையும், தீர்வு தேவை என எண்ணுகின்ற ஒரு சில சிங்கள அரசியல்வாதிகளின் கையாலாகாத்தனத்தையும், தேர்தல் வெற்றிகளுக்காக பௌத்த பீடாதிபதிகளுடனும் பேரினவாத சக்திகளுடனும் அவர்கள் மேற்கொள்ளுகின்ற சமரசப் போக்குகளையும் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வந்ததோடு யதார்த்தமான தமிழர் தரப்பு அரசியல் நிலைப்பாட்டையும் வலியுறுத்தி வந்துள்ளது.

ஆயுதப் போராட்டத்தை அழித்து விட்ட திமிரோடு சிங்கள பௌத்த பேரினவாதமானது தொடர்ச்சியாக இன்றுவரை தமிழ்த் தேசியத்தை சிதைவுறச் செய்யும் கைங்கரியத்தை திட்டமிட்டு செய்து வருகிறது. எமது சமூகம் மற்றும் தமிழ்த் தேசியம், தமிழர்களின் ஒன்றுபட்ட பலம் யாவும் கடந்த பத்தாண்டுகளில் பேரினவாத முகத்தோடும் நல்லாட்சி முகத்தோடும் மாறிமாறி சிதைக்கப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாகவே இன்று வடக்கிலும் கிழக்கிலும் ஏராளமான தமிழ் வேட்பாளர்கள் பல்வேறு கட்சிகளின் பெயரிலும் சுயேச்சைக் குழுக்களாகவும் போட்டியிட வைக்கப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் தமிழர்களின் வாக்குப் பலத்தை சிதறடிப்பதன் மூலம், தமிழர் தாயகத்தில் நெடுந்தீவு முதல் பொத்துவில் வரை அனைத்து தமிழ் மக்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள கூட்டமைப்பை பலவீனப்படுத்தி அதன் மூலம் நாடாளுமன்றத்தில் தமிழ்ச் சமூகத்தினை பலவீனப்படுத்துவதுவதே அதன் நோக்கமாகும்.

கூட்டமைப்புக்கு எதிரானவர்கள் கூட தமக்குள் ஓரணியாக நின்று உறுதியான பிரதிநிதித்துவத்தை, தலைமைத்துவத்தை வழங்கமுடியாத வகையில், திட்டமிட்டு பிரித்தாளப்பட்டு தனித்தனியே வேட்புமனுக்களைத் தாக்கல் செய்ய வைக்கப்பட்டுள்ளனர்.

வன்னியில், கடந்த காலங்களில் எமது கட்சி மேற்கொண்ட தந்திரோபாயங்களே யுத்த காலத்திலும் அதன் பின்னைய காலங்களிலும் எமது மக்களைப் பாதுகாத்ததோடு, அரசியல் உரிமைக்கும் அபிவிருத்திக்குமான போராட்டங்களை சமாந்தரமாக முன்னெடுக்க வாய்ப்புகளை தந்தது. 1994 ஆம் ஆண்டில் எமது கட்சி நாடாளுமன்றத்திற்கு முதன்முறையாக தெரிவுசெய்யப்பட்டபோது நாம் மேற்கொண்ட அரசியல் அணுகுமுறையையே இன்று அநேகமான தமிழ்க் கட்சிகள் பின்பற்ற முற்படுகின்றன.

வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் எமக்கு வழங்கப்படும் வாய்ப்பானது அரசியல் உரிமை, சமூக அபிவிருத்தி என இரண்டு விடயங்களிலும் யதார்த்தமான புதிய அணுகுமுறை யைப் பின்பற்றி வடக்கு, கிழக்கில் புதிய அரசியல் கலாச்சாரத்தை உருவாக்குவதற்கும் எமது மக்களின் சமூக மேம்பாட்டிற்கான பொருத்தமான சூழலை உருவாக்கவும் பலம் சேர்க்கும் என்பதை உறுதியளிக்கிறோம்.

அதேநேரத்தில், கூட்டமைப்பு குறித்து கடந்த சில வருடங்களாக பொதுவெளியில் முன்வைக்கப்பட்ட விமர்சனங்களை உறுதியாக மறுதலிக்க முடியாத வகையிலேயே கூட்டமைப்பின் சில உறுப்பினர்களின் செயற்பாடுகள் அமைந்திருந்தன என்பதையும் நாம் மனச்சாட்சியுடன் ஏற்றுக்கொள்கிறோம். கூட்டமைப்பின் பதிவு தொடர்ச்சியாக தள்ளிப் போவதும், போராட்டத்தில் சம்பந்தப்படாதவர்கள் நாடாளுமன்றக் குழு எனும் அதிகாரத்தோடு தமிழ் மக்களின் தலைவிதியை தீர்மானிக்க முயற்சிப்பதுமே குற்றச்சாட்டுகளின் அடிப்படையாக அமைந்திருக்கின்றன.

ஆனாலும், தமிழ் மக்களின் பிரதிநித்துவம் ஒருமித்த பலத்தோடு செயற்பட வேண்டும் எனும் ஒரே நோக்கத்துக்காக, அனைத்து சந்தர்ப்பங்களிலும் நாம் நிறைய விட்டுக் கொடுப்புகளை செய்திருந்ததோடு சகிப்புத்தன்மையையும் வெளிப்படுத்தியிருந்தோம்.

கூட்டமைப்பு மீதான அண்மைக்கால விமர்சனங்கள் பற்றிய சந்தேகங்கள் உங்கள் மனங்களில் இருக்கிறது என்பதற்கான மாற்றுவழி, தமிழர் ஒற்றுமையை பலவீனப்படுத்துவதோ அல்லது கூட்டமைப்பை சிதைப்பதோ அல்ல. தமிழர்களின் ஒருமித்த பலத்தை சிதறடிக்க வேண்டும் என்று பேரினவாத நிகழ்ச்சி நிரலுடன் தனித்தனியே களமிறக்கப்பட்டுள்ள குழுக்களை ஆதரிப்பதும் அல்ல.

நிரந்தரமான, நியாயமான அரசியல் தீர்வுக்காக பெரும்பான்மையான தமிழ் மக்களினதும் சர்வதேசத்தினதும் ஆதரவோடு தொடர்ச்சியாக செயற்பட்டுவரும் கூட்டமைப்புக்கு மாற்று என்பது இன்னொரு அரைகுறை அரசியல் அமைப்பாக இருக்க முடியாது. கூட்டமைப்புக்குள்ளேயே மக்கள் விரும்பும் மாற்றத்தை உருவாக்கும் வாய்ப்புகளை, வருகின்ற தேர்தலில் வாக்களிக்கும் முறைமையே உங்களுக்கு வழங்குகின்றது.

அதன் மூலம், நாடாளுமன்றத்திலும் அதற்கு வெளியேயும் புதிய அணுகுமுறையை முன்னெடுத்து, எமது அரசியலுரிமைக்கான செயற்பாடுகளில் சம்பந்தப்பட்டுள்ள அனைத்து தரப்புகளையும் கையாள நாம் அனைவரும் ஒருமித்த பலத்துடன் முயற்சிக்க வேண்டும்.

அதற்கான ஒரு தெரிவாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வீட்டுச் சின்னத்தில் யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்புத் தேர்தல் மாவட்டங்களில் போட்டியிடும் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்) இன் ஐந்து வேட்பாளர்களையும் வெற்றி பெற வைக்க வேண்டும் என அன்புடனும் உரிமையுடனும் கேட்டுக் கொள்கிறோம்.

**மணமகள் தேவை**

ஜேர்மனில் வாழும் 29 வயது, 7ல் செவ்வாய் அவிட்டம் 3ம் பாதம் நட்சத்திரமுடைய (V) மணமகனுக்கு படித்த மணமகளை ஜேர்மனி, சுவிஸ், இலங்கை போன்ற நாடுகளில் தேடுகிறோம்.

* அமெரிக்காவில் வாழும் 32 வயது, 12 இல் செவ்வாய் ரேவதி நட்சத்திரமுடைய (V) மணமகனுக்கும்,
* 31 வயதுடைய NON RC மதத்தை சார்ந்த மணமகனுக்கும் மணமகள்களை இலங்கையில் தேடுகிறோம்.

டென்மார்க்கில் வாழும் 37 வயதுடைய திருவாதிரை நட்சத்திர விவாகரத்து பெற்ற (V) மணமகனுக்கு மணமகளை தேடுகிறோம்.

லண்டனில் பட்டப்படிப்பை முடித்து இலங்கையில் அரச தொழில் (Electical Superintendent) புரியும் 31 வயதுடைய உத்தரட் 2 ஆம் பாத நட்சத்திரமுடைய (V) மணமகளுக்கு Lowyer, Engineer, Accountant ஆக தொழில் புரியும் மணமகளை தேடுகிறோம்.

**மணமகன் தேவை**

இலங்கையில் அரச தொழில் புரியும் 31 வயதுடைய புனர்பூசம் 3 ஆம் பாத நட்சத்திர 12 இல் சூரியன் செவ்வாய் (V) மணமகளுக்கு அரச தொழில் புரியும் மணமகனை தேடுகிறோம்.

கனடாவில் வாழும் 31 வயதுடைய பூராட்டாதி நட்சத்தில் 11 இல் சூரியன் செவ்வாய் விவாகரத்தான (V) மணமகளுக்கு இலங்கையில் மணமகனை தேடுகிறோம்.

தொடர்புகளுக்கு -
**சொர்க்கம் திருமண சேவை**
0014166661855
077 650 5097
021 222 1515
WWW.sorkkam.com

**வீடு விற்பனைக்கு**

வலி வடக்கில் 4 படுக்கை அறையும், 2 குளியல் அறையுடன் கூடிய வீடு உடன் விற்பனைக்குண்டு.
**தொடர்புகளுக்கு - 077 1486 6666**

காங்கேசன் துறையில் (KKS) வீட்டுடன் கூடிய 2 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
**தொடர்புகளுக்கு - 0768121383**

**மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**

Fazer 2017 (150CC) மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.
**தொடர்புக்கு - 0769449773**

Spender 2010 (100CC) மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.
**தொடர்புக்கு 0701487059**

Fazer 2015 (150CC) மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.
**தொடர்புக்கு - 0768796158**

**டிரக்டர் விற்பனைக்கு**

Massey Ferguson MF 135 டிரக்டர் விற்பனைக்குண்டு.
**தொடர்புக்கு - 0779342541**

**பஸ் தேவை**

நல்ல நிலையில் உள்ள Journey Bus விலைக்குத் தேவை. ரூட் உடன் இருப்பின் விரும்பத்தக்கது.
**தொடர்புக்கு - 0777531461**

# கொரோனா - 2033

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 19 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

பங்களாதேஷின் டாக்காவிலிருந்து வந்த 19 பேரே கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களாவர்.

நேற்றிரவு தேசிய தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவினால் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி, கொரோனா வைரஸ் தொற்றியுள்ளதாக அடையாளம் காணப் பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2,033 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் குணமடைந்தவர்களின் மொத்த எண் ணிக்கை 1,639 ஆக உயர்வடைந்துள்ளது.

கொரோனாத் தொற்றுடன் அடையா ளம் காணப்பட்டவர்களில் தற்போது 383 நோயாளிகள் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்துடன் இதுவரை 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதனிடையே வைத்தியசாலைகளில் கொரோனா வைரஸ் தொற்று சந்தேகத் தில் 36 பேர் கண்காணிப்பில் வைக்கப்பட் டுள்ளனர் என்று சுகாதார மேம்பாட்டுப் பணியகம் அறிவித்துள்ளது.

## நாங்களாக அடிக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களுக்கு எடுத்துரைப்பதிலேயே கண் ணும் கருத்துமாக உள்ளோம். ஆனால் மற்றவர்கள் செய்யும் கபடமான, பிழை யான விமர்சனங்களுக்குப் பதில் அளித்தே தீரவேண்டும் என்ற கருத்தும் கொண்டவர்கள் நாங்கள். அடித்தால் அடிப்போம். நாங்களாக அடிக்க மாட் டோம்.

– இவ்வாறு தெரிவித்தார் வடமாகாண முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் க.வி. விக்னேஸ்வரன்.

தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் உத்தியோகபூர்வ தேர்தல் பரப்புரை நேற்று மாலை யாழ் தொல்புரம் வழக்கம்பரை யில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அங்கு தலைமையுரை ஆற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வட்டுக்கோட்டைத் தீர்மானம் நிறைவேற்றப் பட்ட தொல்புரம் வழக்கம்பரையில் தேர் தல் பிரசாரம் ஆரம்பித்து வைக்கப்பட் டமை குறிப்பிடத்தக்கது.

தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் பங்காளிக்கட்சிகளான தமிழ் தேசிய கூட் டணி, ஈ.பி.ஆர்.எல்.எவ், தமிழ் தேசிய கட்சி ஆகியவற்றின் வேட்பாளர்களான க.வி. விக்னேஸ்வரன், சுரேஷ் பிறேமச் சந்திரன், ந.சிறீகாந்தா, அனந்தி சசிதரன், க.அருந்தவபாலன், க.இரத்தினகுமார், மீரா அருள்நேசன், சி.விசகுமார், த.சிற் பரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அங்கு உரையாற்றுகையில் விக்னேஸ் வரன் மேலும் கூறியவை வருமாறு:–

வட்டுக்கோட்டைப் பிரகடனம் ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்த புனிதப் பிரகாரத் தில் – வழக்கம்பரை அம்மனின் அருட் பிரவாகம் பொங்கிப் பரவும் இந்தப் பிர தேசத்தில் – எமது மீணாட்சியை அங்குரார்ப் பணம் செய்து வைக்கின்றேன். நாங்கள் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிக் கொடி நாட்ட இருக்கின்றோம் என்றால் அது அம்மனின் அருள் கிரு பையின் காரணத்தினாலேயே. நாம் மீன் ஆட்சி செய்ய எமக்கு மீன் சின்னத்தை வழங்கியவள் அவள். எமக்கென ஓர் அரசியற் கூட்டை ஏற்படுத்த வழி வகுத் தவள் அவள். அரசியலுக்குப் புதியவர் களும் அரசியல் அனுபவம் மிக்கவர் களும் சேர்ந்து நாங்கள் இந்த அரசியற் கூட்டை அமைத்துள்ளோம். அதற்கு வழி கோலியவர் என்னை வழிநடத்தும் அந்த அம்மன் என்று கூறி அவளின் அருளை யாசித்து என் தலைவருரையைத் தொடங்குகின்றேன்.

எங்களைப் பலர் கேட்கும் ஒரு கேள் விக்குப் பதில் அளிப்பதையே இந்தப் பேச்சின் கருவாக ஆக்க உள்ளேன்.

கேள்வி இது தான் – உங்கள் கூட்ட ணிக்கு நாங்கள் ஏன் வாக்களிக்க வேண் டும்? உங்கள் தனிச் சிறப்பு என்ன?

முதலாவது காரணம் – எமது கூட்டணி கொள்கைபாற்பட்டது.

இரண்டாவது – எங்கள் கூட்டணியில் அரசியலுக்குப் புதியவர்களும் இருக்கின் றோம். அந்த விதத்தில் எமது கட்சி புதி யவர்களை அரசியல் அரங்கத்தினுள் உள்ளேற்க முன்வந்துள்ளது. அரசியலில் பல வருடகாலமாக ஈடுபட்ட பழுத்த அனு பவசாலிகளும் இருக்கின்றோம். அரசியல் அனுபவம் மிக்க நண்பர்கள் ஸ்ரீகாந்தா, சுரேஷ் பிறேமசந்திரன் மற்றும் சிவாஜி லிங்கம் போன்றோரைப் போல் அரசிய லில் அனுபவம் மிக்கவர் அருந்தவபாலன் அவர்கள். அவர் தமிழரசுக் கட்சியில் நீண்டகாலம் உறுப்பினராக இருந்தவர். நானும் அனந்தியும் வடமாகாணசபை அரசியலில் இருந்து வந்தவர்கள். மற் றையவர்களான திருமதி மீரா அருள்நேசன் மற்றும் சிற்பரன், இரட்ணகுமார், சிவகு மார் ஆகியோர் அரசியலுக்குப் புதியவர்கள். ஆகவே அனுபவஸ்தர்களுடன் அரசியல் சார் புதுமுகங்களும் சேர்ந்து கூட்டணி அமைத்திருப்பது எமது சிறப்பியல்புக ளில் ஒன்று.

மூன்றாவது – எமது கூட்டணி ஓர் எழுத்து மூல உடன்பாட்டின் அடிப்படை யில் நகர்ந்து கொண்டிருக்கின்றது. கொரோனாவின் தாக்கத்தால் எமது நட வடிக்கைகள் தடைப்பட்டிருந்தாலும் இப் பொழுது நாங்கள் சுதாகரித்துக் கொண்டு எழுந்து நிற்கின்றோம். தேர்தலுக்கு 38 நாள்களே உண்டு. நாம் எழுந்து நிற்கின் றோம் என்றால் அது எமது கூட்டு முயற் சியின் வெற்றி என்றே கூற வேண்டும். வெறும் ஒன்றரை ஆண்டுகள் நிரம்பிய எமது தமிழ் மக்கள் கூட்டணி எம்முடன் சேர்ந்த ஈ.பி.ஆர்.எல்.எவ். தமிழ் தேசியக் கட்சி, தமிழ் மக்கள் சுயாட்சிக் கழகம், இலங்கைத் தமிழர் முற்போக்கு முன்னணி ஆகியோரின் ஒத்துழைப்பால் இன்று ஒரு பலத்த தேசியக் கூட்டணியாக பரிண மித்துள்ளோம்.

நான்காவது – சிறப்பியல்பு நாங்கள் வெளிப்படையாக இயங்கும் ஒரு கூட் டணி. எமது கட்சியில் ஊழல் இல்லை. வெளிப்படைத்தன்மையுண்டு. இவ்வியல் புகளை மற்ற முக்கிய கட்சிகளில் நீங்கள் காணமாட்டீர்கள். எமக்குக் கிடைக்கும் பொதுப்பணம் யாவற்றிற்கும் கணக்கு வைத்துள்ளோம். கணக்கு காட்டுவோம். நாம் எமது சொத்து விவரங்களை மிக விரைவில் வெளிக் கொண்டு வருவோம்.

ஐந்தாவது – சிறப்பியல்பு நாங்கள் எமது எதிரிகளை விமர்சனம் செய்வதி லும் பார்க்க எமது கொள்கைகளையும் நாம் செய்யவிருக்கும் நடவடிக்கைக ளையும் மக்களுக்கு எடுத்துரைப்பதி லேயே கண்ணும் கருத்துமாக உள்ளோம். ஆனால் மற்றவர்கள் செய்யும் கபட மான, பிழையான விமர்சனங்களுக்குப் பதில் அளித்தே தீரவேண்டும் என்ற கருத் தும் கொண்டவர்கள் நாங்கள். அடித்தால் அடிப்போம். நாங்களாக அடிக்க மாட் டோம்.

அரசியல் ரீதியான எமது கொள்கை ளைப் பரிசீலித்தீர்களானால் வடகிழக்கு இணைப்பும் அங்கு சமஷ்டி ஆட்சி கொண்டு வர வேண்டும் என்பதுமே எமது குறிக் கோள். அதை அடைவதற்கு நாங்கள் செய்யவிருக்கும் நடவடிக்கை ஐக்கிய நாடுகள், வல்லரசுகள், புலம்பெயர் உற வுகள் ஆகியோரின் ஆதரவு பெற்று வடக்கு கிழக்கில் மக்கள் தீர்ப்பைப் பெற வைப் பது. எமது தமிழ் மக்கள் தமது தாயகத் தில் தமக்கு சமஷ்டி வேண்டும் என்று கூறினால் அதனை நடைமுறைப்படுத்த உலக நாடுகள் முன்வரவேண்டும். அதற்கான பிரயத்தனங்களில் ஈடுபடு வோம். இவ்வாறான மக்கள் தீர்ப்பு பல நாடுகளில் எடுக்கப்பட்டு அரசியல் பிரச் சினைகள் முன்னர் தீர்க்கப்பட்டுள்ளன என்பதை மனதில் வைத்து நாம் எமது தன்னாட்சிக்கான நடவடிக்கைகளில் இறங்க இருக்கின்றோம்.

அடுத்து எமது மக்களின் மனோ நிலையை மாற்ற இருக்கின்றோம். எனவே தற்சார்பை நாங்கள் ஒரு கோட்பாடாக எமது மக்களிடையே நிலைநிறுத்த உத் தேசித்துள்ளோம்.

அரசியல் ரீதியாகவும், சமூக ரீதியா கவும், பொருளாதார ரீதியாகவும் எம் மக் களிடையே ஒரு மாற்றத்தைக் கொண்டுவர நாம் நடவடிக்கைகள் எடுக்க இருக்கின் றோம். ஆசிரியர்கள் பலரையும் மேலும் தொழில் ரீதியாக முக்கியமான தொழில் களில் ஈடுபட்டவர்களையும், அரசியலில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தியவர்க ளையும் எமது கூட்டணி வேட்பாளர்களாகக் கொண்டுள்ளோம். அவர்களுள் தக்க மூவரைத் தேர்ந்தெடுக்க உங்களிடம் வேண்டுதல் விடுக்கின்றேன். – என்றார்.

## கூட்டமைப்பில் மீளச்சேர்க்க..

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதனை மாற்று அணியின் தலைவர் களும் மற்றையோரும் பல தடவை பொதுவெளிகளில் பேச்சுகள், அறிக்கை கள், நேர்காணல்கள் மூலம் தெரியப்படுத் தியுள்ளனர். அவ்வேளை அவர்களைத் தடுத்து நிறுத்தி வைத்திருக்கத் தவறிவிட்டு இப்போது மீள இணைக்கப் போவதாகக் கூறுவது தேர்தல் கால யுக்தியா?

பிரிந்தவர்களை மீள இணைக்க வேண்டுமென மனதார மாவையரோ அல்லது அவருடன் உள்ளவர்களோ விரும்பினால், எதற்காக தேர்தல் முடி யும்வரை பார்த்துக் கொண்டிருக்க வேண் டும்? இவ்விடயத்தில் மாவையரின் விருப் பத்தில் இரு வேறு பார்வைகள் உண்டு.

முதலாவது – மாற்று அணிகளைச் சேர்ந்தவர்களில் ஒருவர் அல்லது இருவர் வெற்றிபெறும் சாத்தியம் காணப்படு வதால், அவர்கள் வெற்றிபெற்ற பின்னர் அவர்களை இழுத்து கூட்டமைப்புடன் இணைத்து அரசியல் பணிகளை மேற் கொள்வது.

இரண்டாவது – மாற்று அணிகளை முழுமையாகத் தோற்கடித்து, அவற்றின் தலைவர்களை ஓரங்கட்டிவிட்டு, பின் வரிசையினரை மீண்டும் கூட்டமைப் புக்குள் சேர்த்து அவர்களைச் செல்லாக் காசாக்குவது.

எதுவானாலும் அவர்களை கூட்ட மைப்பு சேர்க்க வேண்டுமென உளமார விரும்புகிறது என்றால் தேர்தலுக்கு முன் னர் அதனைச் செய்து, அனைவரும் ஒன் றாகப் போட்டியிட்டு கூடிய ஆசனங்களில் வெற்றிபெற முடியுமென்பது அரசியலில் கைக்குழந்தைக்கும் தெரியும். முக்கிய மாக, யாழ்ப்பாண மாவட்டத்தின் ஏழு ஆச னங்களையும் இலகுவாகப் பெறக்கூடிய தாகவுமிருக்கும்.

மாற்று அணிகளை இணைத்துக் கொண்டு ஒன்றாகப் போட்டியிட்டால் சில வேளை வடக்கு கிழக்கில் சம்பந்தன் நம் பிக்கையுடன் எதிர்பார்க்கும் இருபது ஆச னங்களை (தேசியப் பட்டியல் உட்பட) பெறமுடியும்.

இல்லையேல், சம்பந்தனின் இருபது என்பது வெறும் நம்பிக்கையாகவே போய்விடும். மாவையரின் தேர்தலுக்குப் பின்னைய ஒற்றுமை என்பதும் "மீண்டும் போர் வெடிக்கும்" என்ற ஒலிபெருக்கிச் சத்தமாகவே மாறிவிடும்.

நன்றி: – 'பதிவு' இணையம்

## தமிழர் விடுதலைப்...

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

போர்க் காலத்தில் இரு தரப்புக்கும் கூடு தலான இழப்புகள் இருந்தமை உண் மையே. இது போன்ற நிலைமைகளை மாற்றியமைத்து ஜனநாயக வழியில் செல்லவேண்டும் என்ற நோக்கில்தான் எனது பேச்சு அமைந்திருந்தது.

சஜித் பிரேமதாஸ போன்றவர்கள் இதனை ஒரு பாரிய பிரச்சினையாக மாற்றினர். அதில் என்னை ஒரு கருவி– யாகப் பயன்படுத்தி ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரைத் தாக்க வேண்டும் என்பதற்காக திரிபுபடுத்தி அவர்களால் முன்னெடுக்கப்படுகின்றது.

இது தொடர்பான விளக்கங்களை குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் நான் கொடுத்து இருக்கின்றேன். இந்த விடயத் துக்கான விளக்கத்தை நமது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெளிவாக எடுத்துக் கூறியிருந்தார்.

இந்த விடயத்தை பொறுத்தளவில் தமிழர் தரப்பில் இதனைப் பெரிதாக எடுத்துக்கூறி இருந்தவர்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர். இந்தக் கூட்டமைப்பினர் தமிழனுக்கு ஒரு பிரச்சினை வரும்போது அதைக் காப்பாற்ற முற்படாமல் காட் டிக்கொடுக்கும் கும்பலாகவே இருந்து வருகின்றனர். தமிழரின் விடுதலைப் போராட்டத்தையும் இந்தக் கூட்டமைப்பே காட்டிக் கொடுத்தது. இதில் குறிப்பாக கோடீஸ்வரன், செல்வம் அடைக்கல நாதன், சிவாஜிலிங்கம் போன்றவர்கள் தான் கொக்கரித்துக் கொண்டிருந்தார் கள்.

இத்தனைக்கும் தமிழர்களுக்கான தீர்வு தனித் தமிழ் ஈழம்தான் என விடு தலைப்புலிகளின் மேடையில் நின்று பேசிய தமிழ் அரசியல்வாதிகளின் பேச்சு கள் என்னிடம் இருக்கின்றன. மனோ கணேசன் வவுனியாவில் வைத்து பேசிய பேச்சு, சம்பந்தன் ஐயா விடுதலைப்புலி களின் பொங்கு தமிழ் முதல் மேடையில் பேசிய பேச்சு ஆகியவை என்னிடம் உள்ளன. இவற்றையெல்லாம் நான் கொடுத்தால் இன்று அவர்கள் நேரடி யாகக் கைதுசெய்வார்கள்.

போராட்ட காலத்தில் எங்களைக் காட் டிக் கொடுத்த கும்பல்தான் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்புக்குள் இருக்கின்றது. அவர்களின் இரத்தம் இன்னும் மாற வில்லை. இன்று எனக்கு ஒரு பிரச்சினை வரும்போது அவர்களின் காட்டிக்கொடுக் கும் எண்ணம் வெளிபட்டு வருகின்றது.

தேசிய காங்கிரஸின் தலைவர் அதா வுல்லா கூட என்னைக் கைதுசெய்ய வேண்டும் எனவும், தமிழ் தலைவர்கள் தன்னிடம் அரசியல் கற்றுக்கொள்ள பைல்களைத் தூக்க வேண்டும் எனவும் பேசியிருந்தார்.

அம்பாறை மாவட்டத்தில் சிறந்த முறையில் அரசியலை முன்னெடுக்க வேண்டும் என்பதுதான் எமது நோக்கம். நாங்கள் வெற்றி பெற்று அரசுடன் இணைந்து அபிவிருத்திகளை முன் னெடுத்து பாதுகாப்பையும் உறுதிப்படுத் துவோம். மேலும், கடந்த சில தினங்களாக சம்பந்தன் ஐயா கனவுதான் காண்கின் றார். ஏனெனில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பை வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் தூக்கி வீசியுள்ளனர் – என்றார்.

Build your dream house from LKR 4.2 mn onwards on your land in Jaffna. Architectural design to complete interior setup. 1, 2, 3 and 4 bedrooms house we built in a 4 months period. Good quality materials supervised and managed by professionally qualified engineers.

Call 0771486666

LTA vertical Heights (PVT) Ltd.

காலைக்கதிர்
Kalaikkathir

# தமிழரசுக்குள் மோதல் எதுவும் கிடையாதாம்!

## விருப்பு வாக்குக்கு வேட்பாளர்கள் ஆரோக்கியமாகவே போட்டியாம்



(கலையமுதன்)

தமிழரசு கட்சிக்குள் எந்தவித மோதலும் கிடையாது. ஆனாலும் விருப்பு வாக்குகளை பெற வேட்பாளர்கள் ஆரோக்கியமாக போட்டியிடுகின்றனரென தமிழரசுக்கட்சியின் துணை பொதுச்செயலாளர் சீ.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

தமிழரசு கட்சிக்குள்ளேயே ஒற்றுமை கிடையாது. இந்த நிலையில் எவ்வாறு அவர்கள் விலகிச் சென்ற தரப்புக்களை ஒன்றிணைப்பார் என சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்த கருத்து தொடர்பில் தமிழரசு கட்சியின் துணை பொதுச்செயலாளர் சீ.வி.கே.சிவஞானத்திடம் வினவிய போது தமிழரசுக்கட்சிக்குள எவ்வித மோதலும் கிடையாது என்று அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் தமிழரசு கட்சிக்குள் எந்தவொரு மோதலும் கிடையாது. ஆனாலும் ஜனநாயக ரீதியில் தேர்தலில் போட்டியிடுபவர்கள் விருப்பு வாக்குகளை பெற்றுக் கொள்வதற்காக ஆரோக்கியமான வகையில் போட்டி போடுகின்றனர். அதனை நாம் பிழையாகப் பார்க்க முடியாது. போட்டி போடும் வேட்பாளர்கள் தமக்கு தமக்கென வாக்கு சேகரிப்பதை பிழையாக கருதமுடியாதெனவும் தெரிவித்தார்.

வறுமையால் வாடும் பெண் தலைமைத்துவ குடும்பங்களின் மேம்பாட்டுக்காக கனடாவில் சேகரிக்கப்பட்டு தமிழரசுக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஊடாக வழங்கப்பட்ட 212 மில்லியன் ரூபாய் பணத்திற்கு என்ன நடந்தது என்பது தொடர்பாக தமிழரசு கட்சியின் மகளிர் அணி செயலாளர் விமலேஸ்வரி ஸ்ரீகாந்தரூபன் கேள்வி எழுப்பியுள்ளமை தொடர்பில் தமிழரசு கட்சியின் துணை பொதுச்செயலாளர் சீ.வி.கே.சிவஞானத்திடம் வினவிய போது தனக்கு அது பற்றி எதுவும் தெரியாது என்று கூறினார்.

## இந்தியத் துணைத் தூதர் விஜயம்

(ந.லோகதயாளன்)

காஞ்சிரம்மோட்டை மற்றும் வெடுக்குநாறிப் பகுதிகளிற்கு இந்தியத் துணைத் தூதுவர் பாலச்சந்திரன் நேற்றைய தினம் நேரில் பயணித்து நிலமைகளைக் கண்டறிந்தார். வவுனியா மாவட்டம், நெடுங்கேணி காஞ்சிரம் மோட்டையில் வசிக்கும் 35 குடும்பங்களிற்கான மின் சார இணைப்பைப் பெறுவதற்கு வனவளத் திணைக்களம் தடையாக இருப்பதாக தெரிவித்து அப்பகுதி மக்கள் தற்போது போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இவ்வாறு போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் இந்தியாவின் தமிழ் நாட்டு முகாம்களில் தங்கியிருந்து 2018இல் தாயகம் திரும்பிய நிலையில் சொந்த இடத்தில் குடியேறியபோதிலும் யானைக் காட்டின் நடுவே மின்சார வசதிகள் இன்றியே வாழ்கின்றனர்.

மின்சார வசதி அற்ற குடும்பங்களிற்கு மின் இணைப்பினை பெறுவதற்கு வீதிகளின் குறுக்கே நிற்கும் மரங்களை அகற்ற வனவளத் திணைக்களம் தடைபோடுகின்றமை அப்பகுதியில் மிகப்பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ள நிலையில், அங்கே வாழும் மக்களின் வாழ்வாதாரம், கல்வி என்பனவும் நெருக்கடியை ஏற்படுத்தும் விவகாரங்களாக மாறியிருக்கின்றன எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதேநேரம் நெடுங்கேணி வெடுக்குநாறி மலைப் பகுதியில் உள்ள ஆதிலிங்கேஸ்வரர் ஆலயப்பகுதியை உரிமைகோரும் தொல்லியல் திணைக்களம் அங்கே காணப்படும் சிவன் ஆலயத்தின் புனரமைப்பு மற்றும் பூசை வழிபாட்டிற்கு தடை ஏற்படுத்தும் நிலையில் குறித்த ஆலயத்திற்கும் துணைத் தூதுவர் நேரில் பயணித்து வழிபாட்டில் ஈடுபட்டு பார்வையிட்டார்.

## கிளிநொச்சி செயலகத்தில் நாளை டக்ளஸ் கூட்டிய கூட்டம் ரத்தானது

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஜுன்28

கிளிநொச்சி மாவட்டத்தில் நாளை திங்கட்கிழமை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானாந்தா ஏற்பாடு செய்த கலந்துரையாடல் இறுதி நேரத்தில் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

கடற்றொழிலாளர் சங்கங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் சங்கங்களுடன் நாளைய தினம் கடற்றொழில் அமைச்சர் கலந்துரையாடவுள்ளதாக எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டதோடு இந்தக் கலந்துரையாடலில் மாவட்டச் செயலக உத்தியோகத்தர்களும் கலந்துகொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

இந்த நிலையில் கடந்தவாரம் இதே அமைச்சர் இ.போ.சபைக்கு சென்று கூட்டம் நடத்தியமை தேர்தல் விதிமுறைக்கு முரணானது எனச் சுட்டிக்காட்டப்பட்ட விடயம் மாவட்டச் செயலக அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டிருந்தது.

இதனையடுத்து நேற்றைய தினம் விடுமுறை தினமாக இருந்தபோதும் நாளை இடம்பெறவிருந்த கலந்துரையாடல் தொடர்பில் நேற்று ஆராயப்பட்டு நாளைய கூட்டம் இரத்துச் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.




## சுகாதார பரிசோதர்களுக்கு தேர்தல் கால அதிகாரங்கள்

சுகாதார பாதுகாப்பு நடைமுறை விதிமுறைகளுக்கு அமைவாக தேர்தலை நடத்துவதற்காக வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவிப்பிலுள்ள விதிமுறைகளை மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கையை மேற்கொள்ளும் அதிகாரம் பொது மக்கள் சுகாதார பரிசோதர்களுக்குவழங்குவதற்குசுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

கொரோனா வைரஸுக்கு மத்தியில் சுகாதார நடைமுறைகளை பாதுகாத்து தேர்தலை நடத்துவதற்கான பல பரிந்துரைகள் சுகாதார சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்கவினால் தேர்தல் ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டது.

அப் பரிந்துரைகளிலேயே சுகாதார பாதுகாப்பு நடைமுறை விதிகளுக்கு அமைவாக தேர்தலை நடத்துவதற்காக வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவிப்பிலுள்ள விதிமுறைகளை மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கையை மேற்கொள்ளும் அதிகாரம் பொது மக்கள் சுகாதார பரிசோதர்களுக்கு வழங்குவதென குறிப்பிடப்பட்டுள்ளது

இந்த பரிந்துரைகள் அடங்கிய வர்த்தமானி அறிவிப்பை வார இறுதியில் வெளியிடுவதற்கு எதிர்பார்த்துள்ளதாக சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

## வாழைக்குலைத் திருடர்களிடம் ஹெரோயின் போதைப் பொருள்

யாழ்ப்பாணம்,ஜுன் 28

ஹெரோயின் போதைப் பொருளுடன் யாழ் மாவடடத்தை சேர்ந்த மூன்று இளைஞர்கள் யாழ்ப்பாண பொலிஸாரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

1.05 கிராம் ஹெரோயின் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றசாட்டில் திருநகர் பகுதியைச் சேர்ந்த 24, 25 வயதுடைய நபர்களும்,குரு நகர் பகுதியை சேர்ந்த 25 வயதுடைய ஒருவருமே யாழ் குற்றத் தடுப்பு பிரிவினரால் கைது செயப்பட் டுள்ளனர். இவர்கள் நாளைய தினம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட வுள்ளனர்.

கொய்யத்தோட்டம்பகுதியில்வாழைக் குலையைத் திருடி விற்பனை செய்த குற்றச்சாட்டில் சந்தேக நபர்களைக் கைது செய்த போதே அவர்களிடம் இருந்து இந்த ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.06.2020 இல் வெளியிடப்பெற்றது.



# தினம் ஒரு தலைப்பு
# சித்திரப்போட்டி

மழலைகளின் பொழுதை பயனுள்ளதாக மாற்றுவோம்



படம் 2
ராமதாசன் ஷர்சிகா - தரம் 4
தி/ உவர்மலை விவேகானந்தா கல்லூரி



நாளையதினம் பிறந்தநாளை கொண்டாடவுள்ள தி/ சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் தரம் 3 இல் கல்வி கற்கும் செல்வி லிதுர்ஷா விவேகானந்தன் அவர்களுக்கு வாழ்த்துக்கள்!



படம் 1
ஜெ. நிருஜன் - தரம் 5
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

நேற்றைய தினம் அதிகளவான மாணவர்கள் ‘காற்றாலை’ எனும் தலைப்பில் சித்திரங்களை வரைந்து அனுப்பியிருந்தனர். தரமான அனைத்தையும் பிரசுரிக்க முடியாததால் மேலதிகமாகத் தெரிவு செய்யப்பட்ட சித்திரங்களை வரைந்தவர்களது பெயர் விவரம் மாத்திரம் பிரசுரிக்கப்படுகிறது.

**இந்த மூன்று சித்திரங்களும் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.**

லனுஜன் நவரட்ணம் – தரம் 3
North Bridlewood Junior Public School, Scarboough, Canada

அ. க. ரிஷாளன் – தரம் 11
யா/ பரியோவான் கல்லூரி

டி. அபிலாஷ் – தரம் 10
யா/ புனித பத்திரிசியர் கல்லூரி

உ. ஆராதனா – தரம் 2
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

உ. ரோஷித் – தரம் 4
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

என். வித்யாசாகர் – தரம் 9
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

டி. ஹரிஸ்மன் – தரம் 8
யா/ புனித பத்திரிசியர் கல்லூரி

ஆர். பிரிதி – தரம் 1
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

கே. நிருஜிகா – தரம் 4
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

புனிதன் மதுமிஷியந்த் – தரம் 8
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

ஏ. அக்ஷயா – தரம் 8
யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

ஏ. சதுர்யா – தரம் 6
யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

ர. ஜெயப்பிரகாஷ் – தரம் 4
தி/ கலைமகள் வித்தியாலயம்

அவிஷிகன் விமலானந்தன் – தரம் 1
தி/ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி

இ. லதுஷன் – தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

அத்வைதா ஹோபிநாத் – தரம் 1
தி/ செல்வநாயகபுரம் இந்து மகா வித்தியாலயம்

அபர்ணா உதயகுமார் – தரம் 6
David Leeder Middle School, Canada.

சி. சிவகலை – தரம் 4
யா/ இடைக்குறிச்சி சிறி சுப்பிரமணிய வித்தியாலயம்

ஏ அக்ஷயன் – தரம் 6
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

ஏ. அனன்யா – தரம் 2
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

ஞா. ரிசாந் – தரம் 3
தி/ உவர்மலை விவேகாநந்தா கல்லூரி

காலைக்கதிர் Kalaikathir

## சித்திரப்போட்டி

கொரோனாப் பேரிடர் காலத்தில் வீடுகளில் முடங்கியிருந்த சிறார்களுக்காகக் கடந்த மூன்று மாதங்களாக நாம் தொடர்ந்து நடத்தி வந்த சித்திரப்போட்டி மீண்டும் பாடசாலைகள் இயங்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ள கட்டத்தில் நேற்றுடன் முடிவுக்கு வந்தது.

போட்டிகளில் தொடர்ந்து பங்குபற்றிய சிறார்கள் மற்றும் அவர்களை ஊக்குவித்து ஒத்துழைத்த பெற்றோர்கள் அனைவருக்கும் நன்றிகள். வெற்றி பெற்றோர் விவரம் விரைவில் அறிவிக்கப்படும்.

We BUILD your DREAM home



ARCHITECTURAL DESIGNS TO CONSTRUCTION OF THE HOUSE WITH COMPLETE INTERIOR DECORATION
0094771486666
www.lankavirtualheightsproperty.com
info@lankavirtualheightsproperty.com
L T A VERTICAL HEIGHTS (PVT) LTD
46, STATION ROAD, DEHIWALA, SRI LANKA.